யாழ்ப்பாணம்

பக்கங்கள்:-பன்னிரண்டு

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00


சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி 18 | வெள்ளிக்கிழமை | (02.07.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 196

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.



நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய தேர்த்திருவிழாவான நேற்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ்ந்து நிற்க தேர் வீதியுலாவரும் திருக்காட்சி.
(படங்கள்-சதீபன், ஐங்கரன்)

## யுத்த நிறுத்தம் தொடரும்

# கருணாவுக்கு இராணுவம் பாதுகாப்பு வழங்கவில்லை

## ஜனாதிபதி சந்திரிகா மறுப்பு

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளினால் விலக்கப்பட்ட கருணாவிற்கு இராணுவம் பாதுகாப்பு அளித்து வருகின்றதென்ற விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முற்றாக மறுத்துள்ளார்.**

இலங்கையின் சமாதான முயற்சிகளின் அனுசரணையாளராகச்

திருந்தார்.

நேற்றுக் காலை இடம் பெற்ற

குமாரதுங்கா மேலும் தெரிவித்திருப்பதாவது;

## புதிய அதிபருக்கு எதிராக மாணவர்கள் மறியற் போர்

### மீசாலை விக்னேஸ்வராவில் சம்பவம்

(மந்துவில்)

மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்கள் நேற்றுக் காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை

கல்விப் பணிப்பாளர் சமரச முயற்சிளில் ஈடுபட்டார். எனினும் மாணவர்களுக்குச் சாதகமான பதில் கிடைக்கப் பெறாததால் மீண்டும்

குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முற்றாக மறுத்துள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளின் அனுசரணையாளராகச் செயற்படும் சிறப்புத் தூதுவர் எரிக் சோல் ஹெய்ம் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளைச் சந்தித்த பின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை நேற்றுக் காலை சந்தித்தபோது அவரிடம் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளால் விலக்கப்பட்ட கருணாவை வைத்துக் கொண்டு சமாதான முயற்சிகளுக்கும் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கும் ஊறுவிளைவிக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் உடனடியாகத் தவிர்க்க வேண்டுமென்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எரிக் சோல் ஹெய்மிடம் தெரிவித்திருந்தார்.

நேற்றுக் காலை இடம் பெற்ற எரிக் சோல்ஹெய்முடனான சந்திப்பின் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேலும் தெரிவித்திருப்பதாவது;

கடந்த ஜூன் மாதம் 12ஆம்

(12ஆம் பக்கம் பார்க்க)

# நான் அல்ல; நாய்களே அத்துமீறி நடந்துள்ளன

## நீதிபதியின் கேள்விக்கு சதாம் பதில்

(பாக்தாத்)



ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் நேற்று ஈராக்கிய நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். கடந்த டிசம்பர் கைது செய்யப்பட்ட சதாம் ஹுசைன் கறுப்பு உடையுடன் இடுப்பிற்கு மேலாகச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட நிலையில் நேற்று நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

சதாமிற்கு எதிராக எழு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. நீதிமன்றில் சதாம் ஹுசைனிடம் பெயரைக் (12ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முன்னெடுப்புக்களை கருணா விவகாரம் பாதித்துள்ளது



## புதிய இராணுவத் தளபதி கொட்டே கொட

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள கருணா பற்றிய பிரச்சினை சமாதான முன்னெடுப்புக்களுக்குப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகப் புதிய இராணுவத் தளபதி சாந்த கொட்டே கொட தெரிவித்துள்ளார்.

நேற்றுத் தனது பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு உரை நிகழ்த்தும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற பிளவு நிகழ்வுகளுக்கு இராணுவமே காரணமென விடுதலைப் புலிகள் கருது

(12ஆம் பக்கம் பார்க்க)

(மந்துவில்)

மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்கள் நேற்றுக் காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை மறியற்போராட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

மேற்படி பாடசாலையின் அதிபர் ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்து அவரது இடத்திற்குப் புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

நேற்றைய தினம் புதிய அதிபர் தனது கடமையைப் பொறுப்பேற்கச் சென்றவேளை பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்களாகியோர் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபட்டதுடன் வீதியில் குப்பைகளைப் போட்டுத் தீயிட்டுக் கொளுத்தினர்.

சம்பவத்தையடுத்து பாடசாலைக்குச் சென்ற தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சமரச முயற்சிளில் ஈடுபட்டார். எனினும் மாணவர்களுக்குச் சாதகமான பதில் கிடைக்கப் பெறாததால் மீண்டும் திங்கடகிழமை போராட்டம் தொடருமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(த-56)

# எரிக் சோல் ஹெய்ம் இன்று நாடு திரும்புகிறார்

(கொழும்பு)

நோர்வேயின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக் சோல் ஹெய்ம் இன்று நாடு திரும்புகின்றார்.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான அடுத்த கட்டப் பணியை மேற்கொள்வதற்காக திங்கட்கிழமையன்று இலங்கை வந்தி

(12ஆம் பக்கம் பாரக்க)

# கருணா ஜனநாயக வழிக்கு திரும்புவதைத் தடுக்க முடியாது

## ஐ.தே.கட்சி எம்.பி. கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் விலக்கப்பட்ட கருணா ஜனநாயக வழிக்கு வந்து அரசியல் நடத்துவாரானால் அதனை எவராலும் தடை செய்யவோ அதற்கு எதிராகச் செயற்படவோ முடியாது. இதுவே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளரும் எம்.பியுமான ரவீந்திரத்தெனிய தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,


கருணா ஜனநாயக வழிக்குத் திரும்பி அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்வுள்ளார். இதற்கு எதிராக எவரும செயற்பட முடியாது. கருணா அல்ல வேறு எவராவது ஜனநாயக வழிக்கு வரலாம் இதனையாரும் தடுக்க முடியாது இதுவே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு மாகும் என்றார். (ம)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

### பதினைந்தாம் திருவிழா



## தீர்த்தம் பெற

கண்டியிலே கச்சவடம் காரைநகர் ஊருமிடம்
கெண்டியிலே தீர்த்தம் பெறவிரும்பி - மண்டியிட்டு
கண்திகைப் பிப்பதென்ன காதுவாய் ஓதலென்ன
முண்டியடித் தேவிடத்தை முட்டு.

"தமிழவன்"

## நல்வரம் அருள்வாய்

நல்லார்க்கு நல்லாசி புரிகின்ற நாயகியே
நாட்டில் சமாதானம் நிலைத்திட அருள்வாயே
நயினையில் புதுப்பொலிவு மலர்ந்திட வேண்டுமே
நமக்கென்றும் நிறைவாழ்வு தந்திடு தாயே

நாமங்கள் நாலாயிரம் ஓதி நின் றோமே
நல்லவர்கள் வல்லவர்கள் சூழ நின்றோமே
நாகத்தில் வலம்வரும் நயினையின் அம்மா
நாடுசெழித் தோங்கிட நல்வரம் அருள்வாய்

ஸ்ரீ.ஷாலினி
பெருங்காடு.

## விடிவொன்று தாராயோ

வம்பவிள் மலர் கொண்டு
அரவங்கள் துதிக்க
வாமினியரம் நாக
பூஷணியை நாகத்தமிழர் பூசிக்க
ஏழ்கடலும் ஓமென்று
மந்திரம் ஒலிக்க
என்றென்றும் நாகதேவி
உன் அருள் தமிழைக்காக்க

ஏழைமக்கள் எல்லாம் உன்
ஆலயத்தை நாடுதம்மா
ஏங்கி வந்த என் நெஞ்சும்
நாக பூஷணியை பாடுதம்மா
ஏழு தீவும் ஏழாறும் அரசாளும்
எழிலினியே பூரணியே
ஏங்கி நிற்கும் தமிழர்க்கு
விடிவொன்று தருவாயே

வட்டூர் வரதர்.

## உலா வரும் நாயகி

சப்பரம்தேர் தீர்த்தமுடன் தெப்ப மென்னும்
சால்புயர்ந்த உலாவரும்பேர் விழாக்கள் காண
எப்புறமும் இருந்தடியார் இனிது வந்தே
எண்ணிலராய்க் கூடிவரும் எழில்கூர் காட்சி
அப்பன்சேர் அம்மைநாக பூஷணிப் பேர்
அருளாள்கை இருந்தவாறிவ்வாறோ வென்று
எப்போதும் எவ்வூரும் ஏத்தி நிற்கும்
இறைவிதிருத் தாள்வாழ்க! வாழ்க!என்றும்

நா.க. சிவராமலிங்கம்.

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல: 7

சுவாமிகள்"என் கண்ணும் கருத்தும் நுழையாத நூல்களே இல்லை" என்று கூறுவார்களாம்.சாஸ்திரஞானமும்,அனுபவ ஞானமும் ஒருங்கே கைவரப் பெற்றவர். தவராஜசிங்கமாக விளங்கியவர். கடுந் துறவி,அட்டமா சித்திகளும் அவரிடம் கை கட்டி, வாய் பொத்தி ஏவல் செய்யும்.

திரு வி.க. அவர்களும், ச.சச்சிதானந்தம் பிள்ளை அவர்களும் சுவாமிகளுடைய சீடர்கள் ஆவார்கள்.சுவாமிகள் வேத சிவாகமத்தின் கரை கண்டவர்கள்.108உபநிடதங்களிலும் வல்லவர். அவர் எழுதிய உரை நூல்களைப் படிப்பார்க்கும் இது விளங்கும்.



சுவாமிகள் திருவான்மியூரில் சமாதிக் கோயில் கொண்டார்கள். அவருடைய சமாதிக்கோயிலில் நிகழும் மயூராவாகன சேவனம் என்ற விழாவிற்கும் அவருடைய குருபூஜை விழாவிற்கும் தவறாமல் சென்று விரிவுரை செய்வேன்.

சிதம்பரத்துக்கு அண்மையில் உள்ள திருநாரையூருக்கு விரிவுரை செய்யச் சென்றிருந்தேன். திருநாரையூர் திருமுறை கண்ட நம்பியாண்டார் நம்பி அடிகள் அவதரித்த திருத்தலம் இங்கு பொல்லாப் பிள்ளையாருடைய திருக்கோயில் வரப்பிரசாதமானது.அங்கு அன்று விடிகின்ற வரையிலும் நடைபெறும் தேவராவிழா நடந்து கொண்டிருந்தது.

நான் சிறிது நேரம் தேவாரம் கேட்டுவிட்டு ஒரு அன்பர் வீட்டுத்திண்ணையில் படுத்து உறங்கினேன். விடியற்காலை 4மணிக்கு நான் ஒரு வயல்வெளியில் சென்று கொண்டிருந்தபொழுது பாம்பன் சுவாமிகள் அங்கு வந்து எனக்கு சடக்கர மந்திரம் கனவில் உபதேசம் கெய்தார்கள். இப்படி சுவாமி கள் கனவில் உபதேசித்த காரணத்தினால் சென்னையில் என் இல்லத்தில் பூஜை அறையில் நடுவில் முருகன் திருவுருவமும் ஒரு புறம் அருணகிரிநாதர் திருவுருவமும், மற்றொரு புறம் பாம்பன் சுவாமிகளின் திருவுருவமும் வைத்து இன்றும் வழிபடுகின்றேன். வழிபாட்டின் போது பாம்பன் சுவாமிகளின் திருவருளை நினைந்து கண்ணீர் வடிப்பேன்.

இருபதாம் நூற்றாண்டில் இரண்டாவது அருணகிரிநாதராகப் பாம்பன் சுவாமிகள் விளங்கினார். அவருடைய பெருமை இமயம் போல் உயர்ந்தது.

சுவாமிகள் மகாசமாதி அடைவதற்கு முன் அவருடைய நெருங்கிய சீடர் திரு.தி.தி.குப்பு சுவாமி செட்டியாரைப் பார்த்து"குப்புசுவாமி! என்னை திருவான்மியூரில் சமாதி வைப்பாயாக.என்னுடைய ஆன்மா அங்கே 500ஆண்டுகள் உலாவிக் கொண்டிருக்கும்"என்று கூறினாராம். அன்பர்கள் சென்னைக்கு போகும் பொழுது திருவான்மியூருக்கு வடக்கே அமைந்துள்ள பாம்பன் சுவாமிகளின் சமாதிக் கோயிலை வழிபட்டு நல்ல கதி பெறுவார்களாக.

## ஏகாதசி விரிவுரை

அந்தக் காலத்தில் தொண்டை நாட்டில் பலப்பல ஊர்களிலும் சென்று வெகு சிறப்பாக எனது தந்தையார் விரிவுரை புரிவார். பிரசங்க உலகில் அவர் சமானமில்லாத ஞான்சூரியனாக விளங்கினார். அப்பொழுது நான் எண்ணிக் கொள்வேன்."அப்பா அவர்கள் போகாத ஊருக்குப் போய் நாம் பிரசங்கம் செய்தால் தான் மக்களிடை நம் பிரசங்கம் எடுக்கும்.அவர் சென்ற ஊரில் நம்முடைய பிரசங்கம் சோபிக்காது" என்று சிந்திப்பேன்.

திருத்தணிக்குக் கிழக்கே நாலு கல் தொலைவிலுள்ள வளைகுளம் என்ற ஊருக்கு என் தந்தையார் அடிக்கடி சென்று விரிவுரை புரிவார். அந்த ஊரிலுள்ள அத்தனை பேரும் என்பிதாவினிடம் உபதேசம் பெற்றுக் கொண்டவர்கள். புலால் மறுத்தல் செய்தவர்கள்.வைகுண்ட ஏகாதசிக்கு வழக்கமாகச் சென்று விடிகின்ற வரை விரிவுரை செய்வார்.

ஓராண்டு அவர் வைகுண்ட ஏகாதசிக்கு காஞ்சீபுரம் போக நேர்ந்தது.வளைகுளத்துக்குப் பிரசங்கம் செய்ய என்னை அனுப்பிவிட்டார். வைகுண்ட ஏகாதசியன்று வளைகுளத்துக்கு நான் விரிவுரை செய்யச் சென்றேன்.ஆனைமேய்ந்த காட்டில் ஆடுநுழைந்தது போலிருந்தது "நம்முடைய பிரசங்கம் இந்த ஊரில் எவ்வாறு எடுபடும்!" என்று நான் பயந்து கொண்டேயிருந்தேன். அன்று விபீஷண சரணாகதி என்ற தலையங்கத்தில் இரவு 9.00மணிக்கு ஆரம்பித்து விடியற்காலை 5.00மணிக்கு முடித்தேன். விரிவுரை மிகவும் உருக்கமாக அமைந்திருந்தது. எல்லோருக்கும் அளவு கடந்த மகிழ்ச்சி "விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று காய்க்குமா?" என்று பேசிக்கொண்டார்கள்.

காஞ்சீபுரத்திற்குப் போன் என் தந்தையார் வளைகுளத்திற்கு மகனை அனுப்பினோமே!அவன் எவ்வாறு விரிவுரை செய்தானோ! என்ற கவலையுடன் மறுநாள் வளைகுளத்திறகு வந்தார். வளைகுளம் ஐயடிகள் காடவர் கோன் நாயனாரால் பாடல் பெற்ற திருத்தலம்.

**இல்லும் பொருளும் இருந்த மனையளவே**
**சொல்லும் அயலார் துடிப்பளவே-நல்ல**
**கிளைகுளத்து நீரளவே கிட்டியே நெஞ்சே**
**வளைகுளத்து ஈசனையே வாழ்த்து**

இது ஷேத்திரக் கோவை வெண்பா. வளைகுளத்திலுள்ள அன்பர்கள் என் தந்தையாரை வரவேற்று வணங்கி"சுவாமி! இனிமேல் எங்கள் ஊருக்குத் தங்கள் விரிவுரை தேவையில்லை சின்ன ஐயாவின் கதை தான் தேவை" என்றார்கள். அதைக்கேட்டு,

**"தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது"**

என்ற திருக்குறளின் படி என் தந்தையார் அளவற்ற மகிழ்ச்சி அடைந்திருப்பார். அதை வெளிக்குக் காட்டாமல் என்னை பார்த்து"என்னடா என் பிழைப்புக்கே உலை வைத்துவிட்டாயே"என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

## மற்றொரு நிகழ்ச்சி

மதுரை திருப்புகழ் சுவாமிகள் காங்கேய நல்லூருக்கு எழுந்தருளியிருந்தார். முன்னே கூறிய வளைகுளத்து அன்பர்கள் சுவாமிகளைத் தங்கள் ஊருக்கு விரிவுரை செய்ய அழைத்துச் சென்றார்கள். சுவாமிகள் வருகையை நன்கு விளம்பரம் செய்திருந்தார்கள். மதுரையிலிருந்து திருப்புகழ்ச் சுவாமிகள் வருகிறார்களே என்று பத்துப் பதினைந்து கிராமங்களிலிருந்து மக்கள் திரளாகக் கூடியிருந்தார்கள்.

சுவாமிகளுக்கு அந்த ஊர் புரோகிதர் வீட்டில் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்திருந்தது. சுவாமிகள் நிரம்ப உணவு உட்கொண்டார்கள் போலும். பகல் 3மணிக்குப் பிரசங்க ஆரம்பம். சுவாமிகள் மேடை மீது நின்று சொற்பொழிவு தொடங்கினார்கள். அவருக்கு வயிற்று வலி உண்டாகியது.அதனால் விரிவுரை செய்ய இயலவில்லை.வெளி வாசலுக்குச் சென்றுவிட்டார்.

என் தந்தையார் அவருக்கு பதில் விரிவுரை செய்ய மேடை மீது ஏறினார். என் குருநாதர் நின்ற இடத்தில் நான் எவ்வாறு நின்று பிரசங்கம் செய்வேன்?" என்று கூறி கண்ணீர் விட்டு அழுதார். அவருக்கு சொற்கள் குழறின. அவருக்கு அத்துணை குரு பக்தி இருந்தது. தந்தையார் என்னை அழைத்து "நீபேசு"என்று பணித்தருளினார். இளம் கன்று பயமறியாது என்பார்கள். எனக்கு இளமைத் துடிப்பு.நான் மேடை மீது ஏறி விருவிருப்பாகத் திருப்புகழ் பற்றியும் வேறு பல நுண்ணிய கருத்துக்களைப் பற்றியும் அச்சமின்றி சொல்மழை பொழிந்தேன். சுவாமிகள் வெளிவாசலுக்குச் சென்று வந்து நான் பிரசங்கம் செய்யும் மேடைக்கு அருகில் கட்டிடத்தில் அமர்ந்து ஜன்னல் வழியாக என் பிரசங்கத்தை ஒரு மணிநேரம் கேட்டுக் கொண்டிருந்தார். அவருக்குப் புளகாகிதம் உண்டாயிற்று. வெளியே வந்து மேடை மீது ஏறி என்னைக் கட்டித் தழுவிக் கொண்டார். கண்ணீர் சிந்தினார். அது கண்ணீர் அன்று. ஆனந்தத்தில் விளைந்த அனுபவம். என்னுடைய திருப்புகழும் திருப்புகழ்த் தத்துவார்த்த உரைகளும் என் உடம்புடன் எரிவாய்ப் படும் என்று எண்ணியிருந்தேன் . இந்த வினாடியில் அந்த எண்ணம் போய் விட்டது.இவன் என்னுடைய வாரிசு. இனி இவனால் திருப்புகழ்பரவும்" என்று கூறி ஆசீர்வதித்தார்.பின்னர் விரிவுரை செய்து மக்களை மகிழ்வித்தார்.

(தொடரும்)

# வெள்ளி முற்றம்

# கூத்து

கனக. செந்திநாதன்

நான் என் சாய்வு நாற்காலியில் படுத்துக் கிடக்கின்றேன். எழுபது ஆண்டுகளாக வாழ்ந்து விட்ட என் தளர்ந்த உடலுக்கு இந்தப் படுக்கையில் ஒரு சுகம். அடுக்கலையில் குரல் கேட்கின்றது அது என் பேரன். சட்சியின் குரல் தான். அவனுடைய குரல் எப்பொழுதும் எடுப்பான தாகத்தான் இருக்கும். இரண்டு நாட்களுக்கு முன்னால் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் ஒரு நாடகம் இடம்பெற்றதாம். பனியும் அதுவும்... நான் போய் பார்க்க வில்லை. நல்ல படியாக சட்சி நடித்தான் என்று பலர் புகழ்ந்தார் களாம் அதைப் பற்றி பத்திரிகையிலே புதினம் வந்திருக்கிறது. அந்த புதினத்தைத் தன் தாய்க்கு உரத்துப் படித்துக்காட்டி புழுகிக் கொண்டிருக்கிறான்.

பாவாடை தாவிணி அணிந்த ஒருத்தி, படலையை திறந்து பத்திரிக்கையும் கையுமாக வருகின்றாள். என் கண் கொஞ்சம் 'புகைச்சல்' யார்? அவள் திலகவதிதான் பெரிய பிள்ளையாகி மூன்று வருடங்களாகின்றன. அந்தக்காலத்தில் சமாத்தியப் பட்ட பிறகு ஒரு குமரிப் பெண்ணுடைய முக தரிசனம் கிடைக்கதவ மிருக்க வேண்டும். காலம் மாறிப்போச்சு. என்னைக் கவனிக்காதவளைப் போல அவள் அடுக்கலைப் பக்கம் விரைகிறாள். முகமலர்ச்சியிலே பொங்க "அத்தான் அத்தான்" என்று அழைத்தூபடி ஓடுகிறாள். "எண்ண" திலகவதி? உள்ளேயிருந்து சச்சியின் குரல் கேட்கிறது.

"நான் சொன்னேனே அத்தான் நீங்கல நல்லாப் படிச்சியள் பேப்பரிலே வருமெண்டு பார்த்தியளா இந்தப் பேப்பரை..."

சச்சியின் நடிப்புத்திறன் வழி வழியாக வந்த சொத்து என்று நினைத்துப் பார்ப்பதில் என்மனம் மகிழ்ச்சி கொள்கின்றது. சச்சியின் தகப்பன்- என் மகன்- ஒரு காலத்தில் நாடகம் ஆடினவன் தான். சிறுத் தொண்டனாக நந்தனராக அவன் ஆடிய கூத்துக்களை நான் காத்திருக்கிறேன். அப்பொழுது பத்திரிக்கைகளில் இதைப்பற்றி எழுதுவதில்லை; எந்த மச்சாளும் புழுக ஓடி வருவதுமில்லை.

என் மகனுடைய நடிப்பிலே தொற்றி, என் நினைவுகள் வேறொரு கிளையிலே தாவுகின்றன. தளர்ந்து போயிருக்கும் என்னுடைய உடலை இப்பொழுது பார்ப்பவர்கள் நானும் ஒரு காலத்தில் கூத்தாடியவன் என்பதை நம்பப் பஞ்சிப் படுவார்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் என்று நினைக்கிறேன். ஓம், வள்ளி சாக ஐம்பது ஆண்டுகள் இருக்கும் நான் ஆடிய கூத்தைக்கண்டு "சபாஷ்" போட்டவர்கள் ஆயிரம் ஆயிரம் கொட்டகைக் கூத்தில் நான் உக்கிர சேனனாக நடித்த காட்சி இப்பொழுதும் என் கண்முன்னே நிற்கிறது. தூக்கமுடியாத பெரிய கிரீடத்தை தலையில் வைத்துக் கொண்டு, வில் உடுப்புக்கள் போட்டு, பெரிய செங்கோலுக்குக் கீழே எரி வெடிகளை வைத்து "படார், படார்" என வெடித்து முழக்கி "அண்டமெலாம் கிடு கிடுத்து நடுங்கிடாதோ இயமனும் நடுங்கிடானோ" என நான் பாடினால், தூங்கிக் கொண்டிருக்கும் சிறு குழந்தைகள் கூட எழுந்து உட்கார்ந்து விடும் ஒரு மையிலுக் கப்பால் உள்ளவர்கள் கூட "உக்கிர சேனன் கலரிக்கு வந்துவிட்டான்" என்று ஓடோடி வருவார்கள்.

அண்ணாவி கந்தப்பிள்ளை என்பவர் அந்தக்காலத்தில் பெரிய அண்ணாவியார் "வருதோத்திரங்களை" அவர் பாடி, கூத்தில் வரும் ராசா ராணிகளை- நடிப்பவர்களை- அறிமுகப்படுத்தும் அழகுக்கு நிகரே கிடையாது என்பது எல்லோருக்கும் தெரியும்.

"அத்தான் கதாநாயகன் வேஷம் போட்டுக்கொண்டு மேடையில் நின்ற அழகைப் பார்க்கவேணும் அத்தை.. உடனே ஆளை அடையாளம் தெரியயலை" அடுக்கலையில் திலகவதியின் குரல் கேட்கிறது.

ஒரு தடவைப் பள்ளிக்கூடத்து மேடையில் ஆடியதற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம் நாங்கள் பத்துக்கிழமைகளாக தொடர்ந்து கூத்தாடியிருக்கின்றோம். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இரவு 8 மணிக்கு கூத்துத் தொடங்கும். 8மணி ஆனதும் பார்த்தால் அந்த இலுப்பையடி வெளியிலே ஒரே சன சமுத்திரம் கண் எட்டும் மட்டும் மனிதத் தலைகள். என்னுடைய காட்சி விடிய 4 மணிக்குத்தான் ஒரு பெண்ணை வலோற்சாரஞ் செய்யும் அரக்கனைக் கொன்றொழிக்கும் வீரம் மிக்க அரசனாகத் நான் நடித்தேன். என் நடிப்பைப் பார்த்து என் இரசிகர்கள் சால்வைகளில் பணம் முடிந்து எறிவார்கள். அதை எடுத்து அண்ணாவியார் வாழ்த்துவார். 'இந்த நாடகத்திலே இன்னாரின் நடிப்புக்காக செல்வச் சீமான் பொன்னம் பலம் போட்ட கொள்ளே கொள்ளை இன்றும் போடுவார் இன்னும் போடுவார்" என அவர் வாழ்த்தும் காட்சி அருமையிலும் அருமை. இரவு பத்து மணிக்கு தூக்கம் போட்டவர்கள் கூட, உக்கிர சேனனாக நான் வந்ததும் எழுந்து விடுவார்கள். என் 'தடல் புடல்" நடிப்பு அப்படிப்பட்டது. அந்தப் பத்துவராங்களும் நான் இந்த ஊரில் இராசா மாதிரித் தான் தலைநிமிர்ந்து நடந்தேன்.

என் தலை நிமிர்வுக்கு கூத்திலே விழுந்த சால்வைகளும் மாலைகளும் காரணம் என்றாலும் ஒரேயொரு சால்வையும் அதில் முடிந்துபோட்ட ஒரு வெள்ளி ரூபாவும் தான் முக்கிய காரணம். அந்த சால்வையை வைத்துக்கொண்டு அண்ணாவியார் வாழ்த்தத் தொடங்கும் போது என் மனம் கிளுகிளுக்கும் அதைப் போடுபவர் என் மாமா சங்கரப்பிள்ளை. அந்தச் சால்வை முடிச்சில் உள்ள வெள்ளி ரூபாவில் என் மச்சாள் சின்னமமை யினுடைய இதயம் ஒளிந்து கொண்டிருப்பதான நினைவே நிறைவு.

அத்தான் மேல் உள்ள ஆசையில் புழுகிறாள்... அடுக்கலையில் சச்சியின் தாய் பேசும் குரல்.

இந்தக் காலத்து சிறுசுகளின் காதல் இந்தக் கிழவன் அந்தக் காலத்தில் காதலித்தான் என்று சொன்னால் இவர்கள் சிரிப்பார்கள். இவர்களுக்குக் காதல் என்பது இந்தக் காலத்திற்குரிய பண்டம் என்ற நினைப்பு. அது எந்தக் காலத்திற்கும் உரியது. அந்தக் காலத்தில் ஓர் ஒழுங்கு முறை இருந்தது.

பத்தாவது வார முடிவில் அண்ணாவியார் கூத்து உடுப்புக்களுடனே எங்களை எல்லாம் கூட்டிக் கொண்டு பெரிய பணக்காறப் புள்ளிகளின் வீடுகளுக்கும், கூத்தாடியவர்களின் உறவு முறையானவர்களின் வீடுகளுக்கும் போய்ச் சிறிய ஆட்டம் காட்டிச் சன்மானம் பெறுவார்.

சில பெரிய புள்ளிகளின் வீடுகளைச் "தரிசித்து" விட்டு என் மாமா சங்கரப்பிள்ளையின் வீட்டுப் படலையைத் தாண்டி முற்றத்திற்கு வருகின்றோம் காதல் எத்தகைய விந்தையான உணர்ச்சி என்பதை அன்றைக் குத்தான் உணரமுடிந்தது. எப்பொழுது இந்த முற்றத்துக்கு வருவோம் என்று என் மனம் உதைத்துக் கொண்டிருந்தது. வந்தாகிவிட்டது. நெஞ்சத்தின் உதைப்பு, கூச்சம் என்ற வேறு உருவந்தாங்கி விட்டது. ஒரு பக்கமாக ஒதுங்கி நடிகர்களுக்குப் பின்னால் மறைந்தும் மறையாததுமாக நின்றேன். அண்ணாவியார் கூத்தில் நடந்த ஒரு சிறு பகுதியாகிய "பால பார்ட்" நிகழ்ச்சியைக் காட்டி விட்டு நிறுத்தினார். என் மாமா வெற்றிலைத் தட்டத்திலே ஐந்து வெள்ளி ரூபாக்களை வைத்து அண்ணாவியாரிடம் நீட்ட, அவரும் வாழ்த்தி முடித்தார். நாங்கள் போகத் தயாரனோம்.

அப்பொழுது "என்ன மருகப் பிள்ளை, பின்னுக்குப் பதுங்கி நிற்காமல் முன்னுக்கு வந்து நில்லேன்" என்று என் மாமா அழைத்தார். கூத்தாடுவது சுகம். இப்படிப்பட்ட நேரத்தில் எல்லோர் முன்னாலும் போய் நிற்பது தான் வலு வில்லங்கம் என்று தோன்றியது. சிறிது துணிவுடன் முன்னாள் போய்நின்றேன். தன் மகளுக்கு என் முழு வேசத்தைக்காட்ட நினைத்திருக்கலாம் என்று என்னுள் எழுந்த நினைவு. அலை ஒன்றே எனக்கு அந்தத் துணிச்சலைத் தந்தது. கதவுக்குப்பின்னால் இந்த வளைகரம் க்தவைச் சிறிது நீக்கியதையும், அதனை அடுத்த மதிமுகம் பாதிக்காட்சி தந்ததையும் களுகாக அலைந்த என் கண்கள் பார்த்தன. என்னுள் ஒரு சிலிர்ப்பு.

மாமா தன் மனைவியான பாக்கியம் மாமியை அழைத்து, 'மருமகப்பிள்ளை இந்தக் கூத்திலை உக்கிர சேனனாக நன்றாக ஆடி சபாஷ் வாங்கினார். கண்திட்டி நாத்திட்டி பாடப்போகுது. ஒரு கறுப்புப் பொட்டு வைத்துவிடு, என்று சொன்னார். பாக்கியம் மாமி என் நெற்றியில் பெரியதாக ஒரு கறுப்புப்பொட்டு வைத்து விட்டுத் திரும்பினால். அந்தக் கனத்தில் என் நெஞ்சிலே விரிந்த மகிழ்ச்சியை விவரிக்க வார்த்தைகளே கிடையாது.

"ஓம் பிள்ளை இப்பவே உன்ர கொத்தானிலை வலு கரிசனை தான், பொழுதுபடைக்கை மிளகாய் தடவி சுடத்தான் வேணும்" சச்சியின் அம்மாதான் பேசுகிறாள் அடுப்படியில் நடக்கும் 'சமா' இன்னமும் கலையவில்லைப் போலும்.

பாக்கியம் மாமியிட்ட அந்தப் பெரிய கறுப்புப்பொட்டில் எல்லாத் திருஷ்டிகளும் அழிந்து விட்டன. என்ற நிறைவு என் மனதிலே பொங்கிய அதே நேரத்தில், ஒருவன் காறித் துப்புவது என் காதில் விழுந்தது. நான் திரும்பிப் பார்த்தேன். எல்லோருமே திரும்பிப் பார்த்தார்கள். அங்கே சண்முகம் நின்றான். எல்லோர் முகங்களிலும் எழுந்துநின்ற கேள்விக் குறிக்குப்பதில் சொல்லுபவனைப் போல, "குத்தகை கொடுக்க வக்கில்லாதவனுக்கு இராச கூத்து எதற்கு? கறுப்புப்பொட்டு எதற்கு? அவரைப் பார்த்து கண் திருஷ்ட்டி படப் போகுதாமல்லோ?" என்று எல்லோர் செவிகளிலும் கூறினான். அந்த நாராசம் கலந்த வார்த்தைகள் என் செவிகளில் விழுந்ததுமே சண்முகத்தின் கழுத்தைத் திருகிக் கொன்றுவிட என் கரங்கள் துடித்தன. மாமாவின் முகத்தைப்பார்த்தேன்.அவர் முகத்திலும் கோபம் கொப்புளித்தது. கைகலப்பு எழும் சூழல் அண்ணாவியார் ஒரு நல்ல காரியம் நடக்கும் போது விபரீதம் விளையக் கூடாது என்று தடுத்துவிட்டார்.

"நாடகம் வடிவா ஆடினது போதும் சோதினை முடிவு வந்தாலல்லவோ தம்பியின்ரை வண்டவாளம் தெரியப்போகுது?"

"அத்தை" அத்தான் இந்தத் தடவை கட்டாயம் பாஸ்பண்ணுவார்" திலகவதி தன் அத்தானுக்காக பரிந்து பேசுகிறாள்.

'உப்பிடித்தான் நீ போன முறையும் சொன்ன நீ."

அடுக்கலையில் பேச்சு வேறு திசையில் திரும்புகிறது.

என் மாமா முன்னிலையில் என் மச்சாள் அறியும் வண்ணம் நான் மர்னபங்கப்படுத்தப்பட்ட அந்த நிகழ்ச்சி என் மனத்தை அரித்தது. இரவு முழுவதும் தூக்கமில்லை. பொழுது விடிந்தது. என்னுள் ஒரு தெளிவு ஏற்பட்டது.

தோட்டம் குத்தகைக்கு எடுத்து பயிரிட்டிருந்தேன். புகையிலைக் கன்றுகளைவிட, சாமை, குரக்கன், பயறு முதலியனவும் பயிரிட்டேன் இதை சாப்பாட்டிற்கு. புகையிலை அந்தக் காலத்தில் பவுன் கணக்கில் விற்பதில்லை. என்றாலும் புகையிலை விற்ற காசு மிஞ்சும். கூத்து முடிப்பாத்தியில் காசை வேறு வழிகளில் தாராளமாகச் செலவு செய்தேன் குத்தகைப் பணத்தை இரண்டு வருடங்களாகக் கொடுக்க வில்லை. நான் சோம்பறியுமல்ல. இரண்டாயிரங்கன்று புகையிலைக்கு ஏழு மணித்தியாலம் துலாவை விட்டு இறங்காமல் உழக்கக் கூடிய வாலிபன் என்று ஊரில் எனக்கும் பெயர். இதனால் என்னுள் இருந்த மன உணர்ச்சி வீறுகொண்டெழுந்தது.

கூத்துத் தொடங்குவதற்கு முன்பே அண்ணாவியார் செலவுக்கென்று- இடையிலே குழப்பாமல் இருப்பதற்காகவும்தான்- ஒவ்வொருவரும் 100 ரூபா கொடுக்க வேண்டுமென்று தீர்மாணித்து ஒரு மனேஜரையும் நியமித்து விட்டார்கள். நல்லதம்பி இதற்காக நியமிக்கப்பட்டார். அவரிடம் பணத்தை முதலில் கொடுத்தவன் நானே. கூத்து என்றால் எனக்கு அப்படிப்பட்ட ஒரு பைத்தியம் இருந்தது.

கூத்துப் பழகத்தொடங்கி விட்டோம். இந்தச் சண்முகம் தொடக்கத்தில் இராசா வேஷத்துக்கு சேர்க்கப்பட்டான். "தொண்டை சரியில்லை" என்று அண்ணாவியார் கூறி, அந்தப் பகுதியை என்னையே ஆடச்சொன்னார். கூத்தாடிய எல்லோருக்கும் என்மீது ஒரு விதப்பெறாமை. இதனால் என்னை வெல்லக்கூடியதாக உடுப்புகள் தேட ஆரம்பித்தார்கள். இந்தப் போட்டியில் நானா விட்டுக்கொடுப்பவன்? என் முடிக்காக, வில் உடுப்புக்காக, புஜகரீடங்களுக்காக,கையிலே சுழற்றும் பட்டு இலேஞ்சிக்காக, நீண்ட செங்கோலுக்காக எவ்வளவோ செலவழித்தேன் அத்துடன் வெள்ளுடுப்பு மேடையேற்றம் என் பவற்றுக் கொல்லாம் பார்த்துப் பார்க்காமல் என் கையால் பணம் விட்டேன்.

நான் ஆடிய கூத்தின் பலன்? குத்தகைப் பணம் கொடாமல் விட்டதற்காகக் காறி உமிழ்கிறான் சண்முகம்!

"உப்பிடி நடிப்புத் திறமையோடை இந்தியாவில் பிறந்திருந்தால் நாளைக்கே சினிமா ஸ்டார்..."

"உந்த வசுக்கோப்புப் பைத்தியம் குறுக்கிட்டுத்தான் படிப்புகளை நாசமாக்குது; திலகவதி உன்னை வீட்டிலை தேடப்போகினம்; நீ போயிட்டுவா பிள்ளை" சச்சியின் தாயின் குரலில் கண்டிப்பும் சற்றே ஏறி இருக்கின்றது.

அடுத்த நாள் மாமா என்னை ஆள்விட்டுக் கூப்பிடுவித்தார். குத்தகைக்காசு முப்பது ரூபாவையும் என்முன்னால் எடுத்து வைத்தார். சண்முகத்திக் முகத்திலே வீசி யெறிந்துவிட்டு தன் தோட்டத்திலே வேலை செய்யும்படி கூறினார். கோப்பி கொண்டு வந்து தந்த பாக்கியம் மாமி இன்னொரு புதினத்தையும் சொன்னார். "இருக்கிற காணி பூமிகளை வித்தாவது அத்தான் இன்னும் இரண்டொரு கூத்து ஆடவேணும். சண்முகம் போன்ற ஆட்கள் எிச்சலிலை சாக வேணும்" என்று இரவு முழுவதும் என் மச்சாள் சின்னம்மை வாய் பொருமினாளாம்.

அப்பொழுது நான் நிதானத்தை இழக்காமல் யோசித்தேன். என் கையில் உரமிருக்கிறது. தோளில் வலு இருக்கிறது. சண்முகம் கூறிய வடு இருக்கிறது. இரக்கமும் பரோபகாரமும் தேவையில்லை. என் சொந்தக் காணியிலை செழிப்பாகப் பயிரிசெய்யும் வரைக்கும் கூத்தைப் பற்றியும், விவாகத்தைப்பற்றியும், எண்ணிப் பார்ப்பதேயில்லை என்று என் மனதிற்குள் நான் சபதமேற்றேன். "பணத்திற்கு வேறு ஏற்பாடு செய்துவிட்டேன்" என்று மாமா தந்த பணத்தைத் தட்டிக்கழித்து" விட்டு வீடு திரும்பினேன்.

கூத்துக்காக நான் செய்வித்த இராசமுடி, வில்லுடுப்பு, செங்கோல், முத்துமாலை எல்லாம் என்னைப் பார்த்துச் சிரிப்பது போலத் தோன்றின. மின்னல் போல ஒரு யோசனை அவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டு கூத்து நடப்பித்த மனேஜர் நல்ல தம்பியிடம் சென்றேன் அங்கே அண்ணாவி கந்தப்பிள்ளையும் இருந்தார். என் கூத்துடுப்புக்களை நல்லதம்பி அவர்களின் பாதத்தின் அடியில் வைத்து அவற்றை அடமானமாக வைத்துக்கொண்டு நூறு ரூபா தரும்படி கேட்டேன். என்னுடைய மனோநிலையை அவர் புரிந்து கொண்டார். பணத்தை எடுத்து வருவதற்காக உள்ளே போக ஆயத்தமானார்.

அப்பொழுது அண்ணாவியார் தன் கைலேஞ்சியில் முடிந்து வைத்திருந்த பணத்தில் நூறு ரூபாவை எடுத்து என்னிடம் நீட்டி "முருகேசு இந்தா இதைப் பிடி சும்மா தலையை ஆட்டாதே உன் குருவான நான் உனக்கு உன் நடிப்புக்கு-தரும் சன்மானம் என்று வைத்துக்கொள்" என்றார்.

"குருவுக்குத்தான் சிஷியன் தட்சனையாக ஏதாவது கொடுக்க வேணும். அதைவிட்டு தங்களிடம் கைநீட்டி வாங்க..." என்று நான் சொல்லி முடிப்பதற்குள் "பறவாயில்லை முருகேசு எடுத்துக்கொள். நீ நல்லாக வந்தபின் இரண்டு மடங்காகத் தாவேன்" என்று சொன்னார். அப்படிச் சொல்லியும் நான் கைநீட்டவேயில்லை. இந்தக் காட்சியை நல்லதம்பி மனேஜரும் பார்த்துக்கொண்டு நின்றார்.

"இந்தா முருகேசு! நான் சொல்வதைக்கேள். இந்த உடுப்புக்களை நான் அண்ணாவியாரிடமே கொடுக்கிறேன். அவருக்கு வேறு கூத்துக்களுக்கும் உதவும். அதற்காக அவரிடம் இருந்து நூறு ரூபாவைப் பெற்றுக்கொள். அடமானம் என்ற கதையே வேண்டாம்" என்றார் மனேஜர்.

விஷயம் அவ்வளவோடு முடிந்தது. நான் பணத்தைப் பெற்றுக் கொண்டு கண்களிலே துளிர்த்த நீரை மறைத்துத் திரும்புகிபொழுது 'முருகேசு, இதை நீயே கொண்டுபோ. உன் நடிப்புத் திறமைக்காக நான் தரும் பரிசு" என்று கூறி அண்ணாவியார் செங்கோலை என்னிடம் நீட்டினார். அதைப் பெற்று நான் கண்களிலே ஒற்றிக்கொண்டேன்.

இந்தக் காலத்தில் ஒரு பரப்புக்காணி என்ன விலை விக்குது? அந்தக் காலத்தில் எழுபது ரூபாவுக்கும் ஏழு பரப்பு கலட்டிநிலம் வாங்கினேன். என் சலியாத உழைப்பும் முயற்சியுமே அதைத் தோட்டமாக்கியது.

"அப்ப நான் போயிட்டுவாறன் அத்தை..." திலகவதி என்னைத் தாண்டி படலையைத் திறந்து செல்கிறாள்.

நான் என் கலட்டி நிலத்தைப் பண்படுத்த பெரும் முயற்சி செய்து கொண்டிருக்க தன் காணியை விற்றாவது நான் கூத்தாட வேண்டும் என்று ஆசை காட்டிய என் மச்சாள் சின்னம்மை அந்தக்காணியையே சீதனமாகக் கொண்டு இன்னொருவனுக்கு வாழ்க்கைப்பட்டுவிட்டாள். எல்லாம் அளந்தபடியே நடக்கும். நான் கூத்தாடி புகழையும் இகழையும் பெற்றேன். விதி தன் கூத்தை... உம்... உலகமாகிய மேடையில் ஆடிவிட்டது. விதியாகிய அண்ணாவி நடத்தும் கூத்தும்... நாங்களும்.. பல பேரப்பிள்ளைகளைக் கண்டுவிட்டேன் நான்.

சச்சி தன் கையில் பத்திரிகையுடன் நான் இருக்கும் இடத்திற்கு வருகின்றான். அந்தப் புதினத்தை எனக்கும் வாசித்துக் காட்ட அவனுக்கு விருப்பம் போலும், பெரிய அறையில் பெட்டகத்துக்குப் பின்னால் இன்னும் நான் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் செங்கோலைப் பார்க்கும் ஆசை என் உள்ளத்தில்

# ஹொங்கொங்கில் ஆர்ப்பாட்டம்!

## லட்சக்கணக்கானோர் பேரணியில்!

(ஹொங்கொங்)

ஹொங்கொங் சீனாவுடன் இணைக்கப்பட்ட ஏழாவது ஆண்டு நிறைவையொட்டி இலட்சக்கணக்கான ஹொங்கொங் பிரஜைகள் கலந்து கொண்ட ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது.



பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள், போஸ்ரர்கள் மூலமாக மதக்குழுக்களும் மனித உரிமை அமைப்புக்களும் ஜனநாயக ஆர்வலர்களும் விடுத்தவேண்டுகோளை ஏற்று இலட்சக்கணக்கான பொதுமக்கள் நேற்று வீதியிலிறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சீனாவின் கைப்பொம்மையான ஹொங்கொங் ஆளுநர் டுங் - சீ - ஹுவா பதவிவிலகவேண்டுமென்றும் ஹொங்கொங்கில் ஜனநாயகத்திற்கு இடமளிக்கவேண்டு மென்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள்,

சீனாவின் பார்வையில் மிகவும் அதிர்ச்சிகரமான இந்நாளின் நடப்புகள் பற்றி அறிவதற்காக விசேட குழுவொன்று ரகசிய கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தது. ஹொங்கொங் பிரச்சினைகளில் சீனா மென்போக்கைக் கடைப்பிடிக்கின்ற போதும், ஜனநாயக ஆர்ப்பாட்டங்கள் சீனாவின் பிரதான நிலப்பரப்பிலும் தொற்றிக் கொள்ளுமோ எனும் பயப்பிராந்தி கம்யூனிஸ் ஆட்சியாளர்களிடம் காணப்படவே செய்கிறது.

(யே)

# ஐரோப்பிய ஒன்றிய தலைவர்

## போர்த்துக்கல் பிரதமர் ஜொஸ்

(லண்டன்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய தலைவர் பதவியை போர்த்துக்கல் பிரதமர் ஜொஸ் மனுவலுக்கு வழங்க அவ் அமைப்பு ஏகமனதாக முடிவு செய்துள்ளதாக ஐரிஸ் பிரதமர் அறிவித்துள்ளார்.



இருபத்தைந்து நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிஸ்ஸல் பயணமானார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய வெளிநாட்டு அமைச்சராக ஸ்பெயின் பிரதமர் ஐரொவியர் சொலானா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கியமானதும் செயலூக்கமுள்ளதும் மிக ஸ்திரமானது மான ஐரோப்பிய சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புமுகமாக தாம் இப் பதவியை ஏற்றுக் கொள்வதாக போர்த்துக் கல் பிரதமர் அறிவித்தார்.

மிகவும் சர்ச்சைக்குரியதாகக் கருதப்பட்டு வந்த இப்பதவி தொடர்பிலான பிரச்சினைகள் முடிவுக்கு வந்துள்ளதையிட்டுப் பல ஐரோப்பிய நாட்டுத் தலைவர்கள் மகிழ்ச்சியும் திருப்தியையும் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.


(யே)

# நேட்டோத் துருப்புக்களை ஆப்கானுக்கு அனுப்புங்கள்

## ஹமீட் கராஸி வேண்டு கோள்

(இஸ்ரான்புல்)

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஆப்கானிஸ்தானில் நடைபெறவிருக்கும் பொதுத தேர்தலில் பாதுகாப்பு வழங்குமுகமாக மேலதிக நேட்டோத் துருப்புக்களை உடனடியாக அனுப்புமாறு ஆப்கான் ஜனா திபதி முஹமட் கராஸி வேண்டு கோள் விடுத்துள்ளார்.



ஆப்கானிஸ்தானுக்கு மேலதிகமாக 1,500 துருப்பினரை அனுப்புவதென்று கடந்த திங்கட்கி ழமை நேட்டோ எடுத்த தீர்மானத்தை வரவேற்ற கராஸி அதற்காகத் தாம் நன்றி தெரிவிப்பதாகவும் காலந்தாழ்த்தாமல் உடனடியா கத் துருப்புக்களை அனுப்புமாறு வேண்டுகோள் விடுத்தார்.

ஆப்கானிஸ்தானில் 6,500 நேட்டோத் துருப்புக்கள் ஏற்கனவே பணியில்மர்த்தப்பட்டுள்ளனர். மேலதிக துருப்புக்கள் அங்கு அனுப்பிவைக்கப்படுவதால் ஆப்கான் பொது மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க அது வழி சமைக்கும். என்று ஜனாதி பதிமேலும்தெரிவித்துள்ளார்.

(யே)

# தாய்வானை நோக்கி தை.்பூன்

(தைபே)

அண்மையில் ஜப்பான் நாட்டைத் தாக்கிய தை.்பூன் புயற் காற்றுத் தாய்வானை நோக்கி மணிக்கு 145 கிலோமீற்றர் வேகத்தில் நகர்ந்து வருவதாக அறிவிக்கப் படுகிறது.




தாய் வானுக் குத் தென் கிழக்கே 350 கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டிருக்கும் இப்புயற்காற்று கிழக்காசியப் பிராந்தியத் தில் மட்டுமே உருவாகுவதாகும். மணிக்கு 180 கிலோமீற்றர் சுழிகாற்று மற்றும் பலத்த மழை என்பவற்றோடு வரும் தை.்பூன் புயல்காற்றால் இவ் வருடம் பாரிய மண்சரிவுகள் ஏற்பட வாயப்புண்டு என்று தாய்வான் அறிவித்துள்ளது.

2001ஆம் ஆண்டு இப் புயற்காற்றுத் தாய்வனைத் தாக்கிய பொழுது சுமார்200 பொதுமக்கள் இறந்தனர். மீண்டும் அதே வருடம் ஓரிருமாதங்களின் பின் விசிய இப்புயலால் தாய்வானில் கடும் வெள்ளப் பெருக்கும் நூற்றுக்கு மேற்பட்ட உயிரிழப்பும் ஏற்பட்டது. இது குறித்த செய்மதிப் படங்களை வெளியிட்டுத் தாய்வான் அரசு நாட்டு மக்களை எச்சரித்துள்ளது.

(யே)

# புதிய பிரதமர் லீ ஹய்-சான்.

(சியோல்)

தென் கொரியாவின் புதிய பிரதமராக லீ -ஹய் -சான் பொறுப்பேற்றுள்ளார்.கடந்த மே மாதம் இறுதியில் கோ.குன் பிரதமர் பதவியை



ராஜினாமாச் செய்த பிற் பாடு இவர் ஜனாதிபதி ரோ-மூஹியூனால் இப் பத விக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

299ஆசனங்கள் கொண்ட தென் கொரியப பாராளுமன்றத் தின் 200 அங்கத்தவர்கள் இவரது நியமனத்தை அங்கீகரித்தனர்.

1988ஆம் ஆண்டு கிம் -டே-யுங்கின் அரசாங்கத்தில் கல்வியமைச்சராகப் பணியாற்றிய லீ, ஆரம்ப காலத்தில் மாணவர் அமைப்புக்களில் தீவிர அரசியல் பணிபுரிந்தார். அதன் காரணமாக 1970களிலும் 80 களிலும் முந்நாள் இராணுவ அரசால் சிறை யில் அடைக்கப்பட்டார்.

ஜனாதிபதி ரோ- மூவுடன் இணைந்து புதிய யூரிக்கட்சியை உருவாக்கிஅதனை ஆளும் கட்சியாக மாற்றுவதில் இவர் பெரும் பங்காற்றினார்.தென் கொரியாவில் ஜனாதிபதியே சகல அதிகாரமும் கொண்டவராக விளங்குகிறார். பிரமதர் பதவி சம்பிரதாயமான தாகும் ஆயினும் இது இரண்டாவது பெரும் பதவியாகக் கருதப்படுகிறது.

(யே)

# WORLD NEWS உலக தரிசனம்

# ஜலாபாத்தில் குண்டு வெடிப்பு

## ஆப்கானில் தொடரும் வன்முறை

(ஜலலாபாத்)

ஆப்கானிஸ்தானின் கிழக்கு நகரான ஜலலாபாத்தில் இடம்பெற்ற இரண்டு குண்டுவெடிப்புச் சம்பவங்களில் ஒருவர் கொல்லப்பட்டதோடு இருபத்தைந்திற்கு மதிகமானவர்கள் காயமடைந்தனர்.



காயமடைந்தவர்களில் ஐந்து சிறுவர்களும் மூன்று பொலிஸாரும் அடங்குவர். இத்தாக்குதல்கள் பொலிஸ் சோதனைச் சாவடிகளை இலக்கு வைத்தே நடந்தப்பட்டதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கந்தகாரில் இடம்பெற்ற மற்றுமொரு சம்பவத்தில் பன்னிரெண்டு பேர் ஆயுததாரிகளால் பிடித்துச் செல்லப்பட்டனர். அத்துடன் ஒரு அவுஸ்திரேலிய பத்திரிகையாளர் ஒருவர் காணாமற்போய்விட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஆயினும் தலிபான் பேச்சாளர் அப்துல் லத்தீப் கருத்துத் தெரிவிக்கையில், பத்திகையாளரைத் துன்புறுத்துவது தலிபான்களின் கொள்கையல்ல என்றார். இன்னுமொரு பேச்சாளரான ஹமீட் அக்ஹா கூறுகையில், கார்மிலா எனப்படும் எஸ்.பி.எஸ். தொலைக்காட்சி நிருபரைத்தாம் கடத்தவில்லை என்றார்.

(யே)

# நயினையில் வீற்றிருந்து நமையாளும் நாயகிக்கு இன்று தீர்த்தோற்சவம்

"அகிலாண்டக் கோடி ஈன்ற அன்னையே பிள்ளையுங்கன்னி என மறை பேசும் ஆனந்த ரூப மயிலே" என்பார் தாயுமான சுவாமிகள். 84 நூறாயிரம் யோனி



பேதங்களிலும் கருவாகி, உயிராக பரிணமிப்பவள் அன்னை. அவ்வவ் உருவங்களின் பெயர்களால் உயிரை மேவிய உடலாகி கலந்து நின்று பெற்றதால் பெறும் உயிர் அனைத்தும் பேணலால் பெற்றிடுவோர் உற்றதால் விரும்பிய அனைத்தும் உதவலால் எக்கலையும் சொற்றதால் உலகெடுவானும் தொழுதலால் என்றென்றும் பற்றதாம் கருணை பொழிதலால் ஸ்ரீ புவனேஸ்வரி என்று போற்றப்படுகின்றனள்.

அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஸ்ரீ காமயோகினி, ஸ்ரீ புவனேஸ்வரி ஒன்றாக அமைந்த பீடம், அருந்தவர்கள், அமரர் எண்ணாயிரம் கோடி. அவர் தம் தலைவர்கள் முப்பத்து முக்கோடி அமரர் கோன் இந்திரன் வேண்டுதலால் அமைந்த பீடம் இதுவேயாம். அன்று மணிப்பீடம், மணித்துவீபம், சிந்தாமணிப்பீடம் என்று அழைக்கப்பட்ட பீடம் இன்று நாகத்தீபம், நாகத்தீவு, நாவலந்தீவு, நயினாதீவு என்று பல பெயர்களால் அழைக்கப்படும். உலக யாத்திரைத் தலங்களில் எங்கும் காணாத சிறப்புடையதாக விளங்குகின்றது.

## நவரெத்தினம் பரந்தாமன்

தேவகோனது பாவவிமோசனம் நீக்கற்பொருட்டு உலக மாதா ஸ்ரீ புவனேஸ்வரி ஆனிப் பூரணையில் இங்கு தோன்றி சிவ சக்தி ரூபினியாக ஏக நாயகியாக விலை மதித்தற்கரிய மணிப்பீட சிந்தாமணித் தவிசு அமர்ந்து அருள் பாலித்த தினமே இங்கு மஹோற்சவ காலமாக கருதப்பட்டு வருகின்றது.

சர்ப்பமூர்த்தியாகிய ஆதிசேடனும், நாராயணனும், மகாலட்சுமியும், தேவ அதிபதிகளும், தேவ கோடிகளும், பிரம்மா, சரஸ்வதி போன்றவர்களும், சப்தரிஷிகளும் சிவசக்தி ரூபினியாக விளங்கிய அன்னையை கிரோத, திரோத யுகங்களில் வழிபட்டு பெரும் பேறடைந்தனர். நயினையில் இன்றும் கூட சிவாலயம் தனிமையில் அமைக்க முடியாத காரணம் சிவமும் சக்தியும் இணைந்த தலமிது என்பதால் ஆகும்.

இங்குள்ள மகாசக்தி இன்று நாகபூசணி, நாகம்மாள், நாகேஸ்வரி என்று அழைக்கப்படுகின்றாள். காசியில் விசாலாட்சி அன்னை பூரணிக்கும். தில்லைமன்றாடும் சிவகாமிக்கும் ஆலவாய் (மதுரை) மீனாட்சிக்கும் மிக நெருங்கிய தொடர்பு இத்தலத்திலிருந்தே கிடைப்பதாக ஸ்ரீ காஞ்சி காம கோடி பெரிய சுவாமிகள் குறிப்பிட்டுள்ளதை யாவரும் உணர்வர்.

இத்திருக்கோவிலின் மூல மூர்த்தியாகிய சர்ப்பமும், லிங்கமும், பீடமும் தோன்றிய காலங்களை இந்திய அகழ்வாய்வாளர் குறைந்தது 14 ஆயிரம் ஆண்டுகளாக குறிக்கின்றனர். அன்றைய தகவல் கணிப்புக் கருவியின் எல்லை அதற்கு மேல் அமையவில்லை.

நயினை நாகம்மாளை முற்காலத்தில் தரிசித்தவர்களில் இராவணாதியரும், மண்டோதரியும், மகா நாகர் புலாதரநாகராசாக்களும் அவர் தம் வாரிசுகளும் அடங்குவர். மெய்ஞானம் வேண்டி ஆகாயப் பிரவேசம் செய்த போதி மாதவன் இங்கு தோன்றிய பேரொளியில் வைகாசி விசாகத்தின் இருக்கை அமர்ந்து ஆனிப் பூரணையில் அன்னையைத் தரிசித்து பேறடைந்ததால் இரு தடவைகள் இங்கு வந்து போந்தனர். இன்றும் அச்சுவடிகளை நயினையில் காணமுடியும். தேவகோனால் அமைக்கப்பட்ட விலைமதித்தற்கரிய அன்னையின் மணிச் சிம்மாசனத்தில் தான் இந்த மகிமை இருப்பதை எண்ணிய நாக அரசர்கள் மணிப்பீடச் சித்தாசனத்தை தாம் ஆட்சி அமைத்த கல்யாணிக்கு (களனி) மாற்றினர் என்பது வரலாறு. சிம்மாசனம் பிரித்தெடுக்கக்கூடியது. பீடமோ, சர்ப்பமோ பிரித்தெடுக்கமுடியாதது. இது நம் ஈழ மண்ணிலேயே உள்ளது. இலட்சோப லட்சம் அடியார்களை அலை கடல்போல் இங்கு வரவழைக்கின்ற புதுமை யாது? என்பதே இக்கட்டுரையின் கருவாகும். ஆனிப் பூரணையில் அருள் பெற்ற ஏனையவர்கள், பாண்டவர்கள், அனுமான்போகர், யோகர் தும்புறு, அகத்தியர், மணிமேகலை போன்றவர்கள் மணிமேகலா தெய்வம் என அழைக்கப்பட்ட ஸ்ரீ புவனேஸ்வரியிடம் அருள் பெற்று உயர்ந்தனர்.

பிற்காலத்தில் மாசாத்துவன், வீராச்சாமி செட்டியார், நயினா பட்டர் ஆகியோரும் பூநாகம் முதலியனவும் தம்மை வழிபட்ட வரலாறு பேசப்படுகின்றது. இதன் பின் போர்த்துக்கீசர் வரலாற்றைத் தொடர்ந்த வரலாறு ஒட்டுமொத்தமாக நாகம்மாளது சிந்தனையை ஒருகணம் நோக்கினால்,

உலக தலங்கட்குள் ஒப்பரிய மகாசக்தி உறையும் தலம், மூர்த்தி, தீர்த்தமுடைய பெருஞ் சிறப்பும் ஒரு அடியார் முன்னோக்கி அன்னை நூறு அடி எம் முன்னோக்கி வருதலையும் அருள்தலையும் அற்புதமாகக் காணமுடியும்.

## பௌர்ணமி விழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபை - கச்சாய் பொதுநூலக அபிவிருத்திச் சபையின் கலை, கலாசாரப் பிரிவின் ஏற்பாட்டில் இன்று நண்பகல் 12 மணிக்கு பௌர்ணமி விழா சாவகச்சேரி பிரதேச சபையின் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நூலக அபிவிருத்திச் சபைத் தலைவர் கு.நடராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சன சமூக நிலைய அபிவருத்தி உத்தியோகத்தர் எஸ். இராமச்சந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக கலாசார உத்தியோகத்தர் எஸ்.பத்மராணி, யா/தொழில் நுட்பக் கல்லூரியின் சட்டத்துறை விரிவுரையாளர் இ.சோதிநாதனும் அரசியல் துறையின் கொடிகாமம் கோட்டப்பொறுப்பாளர் இ.இரத்தினம் முதன்மை விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ)

## ஒரே இலக்கத் தகட்டுடன் இரு வாகனங்கள் ஒன்றில் தேரர் பயணம்

(மாத்தளை)

ஒரே பதிவு இலக்கத் தகடுகள் கொண்ட இரண்டு வாகனங்கள் மாத்தளைப் பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை கைப்பற்றப்பட்டன.

251 - 6648 என்ற இலக்கம் கொண்ட இந்த இரண்டு வாகனங்களில் ஒன்று ஜாதிக ஹெல உறுமையவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துறலிய ரத்னதேரர் பயணம் செய்த வாகனமாகும்.

மாத்தளையில் நடைபெற்ற பௌத்த மாநாட்டிற்கு கலந்து கொள்ளச் சென்ற தேரரின் வாகனத்தைத் தொடந்து சில நிமிடங்களில் அதே இலக்கத்துடன் வந்த மற்றைய வாகனமும் கைப்பற்றப்பட்டதாக மாத்தளைப் பொலிஸார் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரி ஜெகதவைக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் எல்லாவல மேதானந்த தேரர் கூறுகையில், மற்றொருவரிடமிருந்து பெற்றுக் கொண்ட வாகனம் ஒன்றிலேயே ரத்னதேரோ பயணஞ்செய்ததாகத் தெரிவித்துள்ளார். (உ-2)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சலன சித்திரம் - யாழ்ப்பாணம் திரைக்கலை அமைப்பின் மாவட்ட நிர்வாகக் குழுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடிகாமம் வீதி கரவெட்டியிலுள்ள சம்மேளனக் கிளைச் செயலகத்தில் தலைவர் வி.எஸ்.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

க.பொ.த.(சா.த) மாணவர்களே!
வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.

## அக்கிரஹார காப்புறுதித் திட்டம் மீண்டும் அமுல்

(கொழும்பு)

அரச சேவையாளர்களுக்கான அக்கிரஹார காப்புறுதித்திட்டம் அரசாங்கத்தினால் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரச ஊழியர்களின் சுகாதார நலன்களை பேணும் வகையில் அவர்களுக்கு வழங்கப்படும் இந்தக் காப்புறுதித் திட்டத்தை தொழிற்சங்கக் கூட்டமைப்பு வேற்றுள்ளது.

அரசாங்க ஊழியர்களின் நீண்டகால கோரிக்கையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமே நிறைவேற்றியுள்ளதாகவும், எனவே அரசுக்குத் தேவையான ஆதரவை வழங்கத் தாம் எப்போதும் தயாராக இருப்பதாகவும் தொழிற்சங்க கூட்டமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.(உ-60,10)

## அறிவித்தல்

### மாவட்ட நீதிமன்றம் சாவகச்சேரி

வழ. இல 4609/காணி

கார்த்திகேசு நடராசா,
கிராம்புவில்,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

வழக்காளி

எதிர்:
1. கனகலிங்கம் மகள் சந்திராதேவி
2. கனகலிங்கம் மகள் சறோஜாதேவி
3. கனகலிங்கம் பெண் சிவபாக்கியம்
ஏழாலை தெற்கு, ஏழாலை.
4. திருஞானசம்பந்தர் மகள் சந்திரகாந்தி
5. வேலுப்பிள்ளை திருஞானசம்பந்தர்
இருவரும் டச்சு றோட்டு,
சாவகச்சேரி.

எதிராளிகள்.

5. வேலுப்பிள்ளை திருநானசம்பந்தர்
டச்சு றோட்டு.
சாவகச்சேரி.

2004 ம் ஆண்டு ஆனி மாதம் 29 ம் திகதி

மேற்படி வழக்கில் மேன்முறையீட்டு தீர்ப்பை மன்றில் வாசிப்பதற்காக 09.07.2004 ல் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் இவ்வழக்கு கூப்பிடப்படும். எனவே 5ம் எதிராளி குறித்த 09.07.2004 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நீதிமன்றத்தில் தோன்றுமாறு இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

வரைவு
செ.கணபதிப்பிள்ளை
வழக்காளி சட்டத்தரணி.

நீதிமன்றக் கட்டளைப்படி
வி.நடராஜா
பதிவாளர், சாவகச்சேரி,
மாவட்ட நீதிமன்றம்.

(C/289)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்கள யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நாவலர் மணிமண்டபத்தில் நடாத்தும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று வட்டுக்கொட்டை மத்திய கல்லூரி ஆசிரியர் சி.கேசவனின் சிறப்புச் சொற்பொழிவு 'சைவமும் இளைஞர்களும்' எனும் பொருளில் இடம்பெறவுள்ளது.(உ-19)

## இலங்கை மீனவர் தமிழ் நாட்டில் கைது

(கொழும்பு)

இந்தியக் கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக மீன் பிடியில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்ட 15 இலங்கை மீனவர்களையும் மூன்று மீன் பிடி வள்ளங்களையும் விடுவித்து அவர்களுக்கு எதிரான வழக்குகளையும் தமிழ் நாடு அரசு தள்ளுபடி செய்துள்ளது.

இந்த மீனவர்கள் இன்னும் சில தினங்களில் இலங்கை வந்து சேர்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## தீர்த்தோற்சவம்

(பருத்தித்துறை)

பொலிகண்டி கந்தவன முருகன் ஆலயத்தின் வருடாந்தத் தீர்த்தோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (52)

## அறிவித்தல்

### மாவட்ட நீதிமன்றம் சாவகச்சேரி

வழ. இல 4609

கார்த்திகேசு நடராசா,
கிராம்புவில்,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

வழக்காளி

எதிர்:
1. கனகலிங்கம் மகள் சந்திராதேவி
2. கனகலிங்கம் மகள் சறோஜாதேவி
3. கனகலிங்கம் பெண் சிவபாக்கியம்
ஏழாலை தெற்கு, ஏழாலை.
4. திருஞானசம்பந்தர் மகள் சந்திரகாந்தி
5. வேலுப்பிள்ளை திருஞானசம்பந்தர்
இருவரும் டச்சு றோட்டு,
சாவகச்சேரி.

எதிராளிகள்.

4. திருஞானசம்பந்தர் மகள் சந்திரகாந்தி
டச்சு றோட்டு,
சாவகச்சேரி.

2004 ம் ஆண்டு ஆனி மாதம் 29 ம் திகதி

மேற்படி வழக்கில் மேன்முறையீட்டு தீர்ப்பை மன்றில் வாசிப்பதற்காக 09.07.2004 ல் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் இவ்வழக்கு கூப்பிடப்படும். எனவே 4ம் எதிராளி குறித்த 09.07.2004 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நீதிமன்றத்தில் தோன்றுமாறு இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

வரைவு:
செ.கணபதிப்பிள்ளை
வழக்காளி சட்டத்தரணி.

நீதிமன்றக் கட்டளைப்படி
வி.நடராஜா
பதிவாளர், சாவகச்சேரி,
மாவட்ட நீதிமன்றம்.

(C/288)





உ

சரவணபவாய நம

## நீர்வேலி அருள்மிகு செல்லக் கதிர்காம சுவாமி கோவில்

# "குமார புஷ்கரணி"

# தீர்த்தோற்சவச் சிறப்பிதழ் 02.07.2004

## பிரார்த்தனை உரை

நீர்வேலியில் எழுந்தருளி அருளாட்சி நல்கும் செல்லக் கதிர்மாக சுவாமியின் தீர்த்தோற்சவம், எம்பெருமானின் கிருபையால் இம்முறை சிறப்புற நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

"கந்தஸ்ய அதுலாம் கீர்த்திம் கலி. கல்மஷ நாசினீம்" என்று வடமொழி சுலோகம் கூறுவது போல கலியுக துன்பங்கள் யாவும் கந்தனை வழிபடுவதால் நீங்கிவிடும்.

சித்துக்களில்வல்ல இரு தபஸ்விினிகள் உண்டாக்கிய இவ் ஆலயத்தில் குமரன் அருள் மழை சொரிகின்றான். எம்பெருமானை நாடிவரும் அடியார் திருக்கூட்டத்தின் சிறப்பே இதற்குச் சான்றாகும்.

இவ்வாண்டு புதிதாக "குமார புஷ்கரணி" என்ற திருக்குளம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது கோவிலுக்கு மேலும் சிறப்பைத் தருகிறது. இவ்வாண்டு மகா மக வருடம் ஆகும். மாசி மக தினத்தில் திருக்குள நீர் முருகனுக்கு அர்ப்பணிக்கப்பட்டமை அவன் செயலேயாகும்.


பஞ்ச கிருத்தியங்களுள் ஒன்றான அருளலை இன்று குமரன் செய்யும் வேளையில் அவனடி பணிந்து அவனருளுக்குப் பாத்திரமாவோமாக.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

***சிவஸ்ரீ கு. தியாகராஜக் குருக்கள்***
*(நீர்வை மணி)*
*பிரதம குரு*



ஆலய திருமுகப்புத் தோற்றம்



புதிதாக அமைக்கப்பெற்ற குமார புஷ்கரணி
தீர்த்தத்தின் கவினுறு தோற்றம்

## திருத்தல வரலாறு

புகழ் பூத்த நீர்வையூரின் வடபால் அருளொளி வீசுகின்ற மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என யாவிலும் சிறப்புற்று காணப்படுகின்ற திருத்தலமே செல்லக் கதிர்காமசுவாமி கோயில்ஆகும் இந்தத் தலத் துடன் இணைந்து "குமாரபுஷ்கரணி" எனும் தீர்த்தம் காணப்படுகின்றது.இங்கு கந்தன் ஆனி, ஆடி மாதங்களில் தீர்த்த உற்சவம் கண்டருளுவது கண்கொள்ளாக் காட்சி யாகும். இந்தத் தலத்தில் மூலாலயத்தில் ஞானவேல் காட்சி தருவதும், முருகப் பெருமானுக்கே உற்சவ காலங்களில் தனிச் சிறப்பு அளிப்பதும் இவ்வாலயத் திற்குரிய சிறப்பாகும்.

இத்தலத்தினுடைய தலவிருட்சமாக பழமை மிகு நெல்லி மரமும் கடம்ப மரமும் திகழ்கின்றது. இங்கு சில தசாப்த வருடங்களுக்கு முன்னர் இரு தபஸ்வினிகள் முருகனருள்பெற்று இவ்வாலயத்தினை புனருத்தாரணஞ் செய்து கும்பாபிடேகம் செய்வித்ததாக கூறுவர். இந்தத் திருத்தலம் இன்று மிகப் பெரிய முருகனருள் நிறைந்த தலமாக மிளிர்கின்றது. இந்தத் தலத்தில் வள்ளி தேவசேனா சமேத அறுமுகப் பெரு மான் அழகே யுருவாகத் திகழ்கின்றான். இவ்வாலய கந்தன் மீது பலர் கீர்த்தனைகள், தோத்திர பாமாலை, திரு வூஞ்சல், கவி தாஞ்சலி முதலிய செந்தமிழ் கவிதை களாக்கியுள்ளார்கள். இங்கு ஆனி மாத மஹோற் சவம், கந்த ஷஷ்டிப் பெருவிழா, திருக்கார்த்திகை உற் சவம் முதலிய விழாக்கள் பெருவிழாக் களாக கொண்டாடப்படுகின்றன. இந்தத் தலத்தில் அழகிய வலஞ்சுழி விநாயகர் காணப்படுகின்றார்.

நீர்வேலி கதிர்காம சுவாமிக்கு 1997ஆம் ஆண்டு வைகாசி மாத புனர்பூச நட்சத்திரத்தில் இறுதியாக கும்பாபிஷேகம் நிகழ்ந்து இத்தலம் எழுச்சியோடு அழகுறத் திகழ்கின்றது. இவ்வகைச் சிறப்புக்கள் யாவினையையும் தவிர அருணகிரிநாத சுவாமிகளது நினைவு நன்நாளாம். ஆனி பூரணையில் தீர்த்த விழா காணும் தலமாக இது காட்சி தருகின்றது. முருகனடியார்கள் மனதில் நீங்காது நிறைந்திருக்கும் தலமாக இந்த நீர்வேலி கதிர்காம சுவாமி கோயில் நிலைத் திருக்மெனின் அது மிகையாகாது.

## வேலுண்டே துணை

நீர்வைப் பதியின் அருள்நிதி தரவரும் ஆனந்த மலையாம் செல்லக் கதிர்காம சுவாமியின் தீர்தோற்சவம் இன்று சிறப்பாக நடைபெறுகிறது. ஆலயக் குருக்கள் நீர்வை மணி ஐயாவின் வழிகாட்டலும் அடியவர்களின் முயற்சியும் எம் பெருமானின் கிருபையும் சங்கமித்ததன்பேறாக ஓராண்டுகாலப் பகுதிக்குள் "குமார புஷ்கரணி" என்ற அழகிய திருக்குளம் அமைக்கப்பட்டுள்ளது.

மூலவரர்க வேற்பெருமான் அமைந்து அருளாட்சி நல்கும் ஆலயங்கள் அருட் சக்தி மேம்பட்ட ஆலயங்களாக விளங்குவதைக் காண்கிறோம். செல்லக் கதிர்காம சுவாமி வேற் பெருமானாக - மூலவராக அமைந்து அருள் சுரக்கிறார்.

திருமுருகாற்றுப் படையில் எம்பெருமான்"எய்யா நல்லி சைச் செவ் வேற் சேய்" எனச் சிறப்பிக்கப்படுகின்றான். வேல் வகுப்பில் வேலின் பெருமை தனித்தெடுத்துப் புகழப்படுகின்றது. முருகனை நினைந்து அவன் வேலினைப் போற்றிய பலர் நற்கதி பெற்றுய்ந்தனர். கருணைசெய் கந்தன் வேறு ஞானவேல் வேறு அன்று வெற்றி வேற் பெருமான் எமக்குத் துணையாக நின்று, எம் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைக்கத் துணை செய்ய வேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

*வீரவேல் தாரை வேல் விண்ணோர் சிறைமீட்ட*
*தீரவேல் செவ்வேள் திருக்கை வேல்-*
*வாரிகுளித்த*
*வேல் கொற்ற வேல் சூர்மார்பும் குன்றும்*
*துளைத்தவேல் உண்டே துணை.*

***'சிவத்தமிழ் சொல்லழகர் ச. லலீசன்***
*(ஆசிரியர். ஸ்ரீசோமாஸ் கந்தக் கல்லூரி புத்தூர்)*

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் விடுக்கும் வாழ்த்துச் செய்தி

சிவபூமியாகிய ஈழமணித் திருநாட்டில். யாழ்ப்பாணக் குடாநாடு ஞானபூமியாகத் திகழ்கின்றது. கலியுகவரதனாகிய கந்தவேள் பெருமானின் ஞான ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசம் யாழ்ப்பாணக் குடாநாடு ஆகும். அபிடேகக் கந்தனாக மாவிட்டபுரம் முருகன் ஆலயமும், அலங்காரக் கந்தனாக நல்லூர் முருகன் ஆலயமும், அன்னதானக் கந்தனாக செல்வச்சந்நிதி முருகன் ஆலயமும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் சைவமும் தமிழும் சிறப்புற்று விளங்கும் கிராமங்களில் நீர்வேலிப் பதி முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. முப்பொழுதும் திருமேனி தீண்டிப் பக்தி சிரத்தையோடு பூசிக்கின்ற சிவாச்சாரியப் பெருமக்கள் பலர் நீர்வேலிக் கிராமத்தில் வாழையடி வாழையாக வாழ்ந்து வருகின்றார்கள். அருள் மிக்க பெரிய ஆலயங்களில் பல இக் கிராமத்தில் காணப்படுகின்றன. சிவசங்கர பண்டிதர் போன்ற சைவத்தையும், தமிழையும் வளர்த்த சான்றோர்கள் பலர் இக் கிராமத்திலே வாழ்ந்து வந்தார்கள்.

இக்கிராமத்திலே இருந்து அருளாட்சிபுரியும் ஆலயங்களிலே செல்லக் கதிர்காம முருகன் ஆலயமும் ஒன்றாகும். இந்த ஆலயம் மிகக் குறுகிய காலத்திலே பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது. இவ் ஆலயத்தின் பூசராகிய நீர்வை மணி ஐயா அவர்களின் அயராத பணியினாலே இவ் ஆலயம் அருள் ஒளியினை வீசும் பேராலயமாக வளர்ச்சி அடைந்துள்ளது. ஒரு ஆலயத்தின் சிறப்பிற்கு மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் அவசியம் ஆகும். ஐயா அவர்களின் பெரு முயற்சினாலும், பக்தர்களின் உதவியினாலும் "குமார புஷ்கரணி" என்ற பெயரில் தீர்த்தத் தடாகம் இவ் ஆலயத்திற்குப் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த வருடத் தீர்த்தத் திருவிழா குமாரபுஷ்கரணித் தீர்த்தத்திலே இடம் பெறவுள்ளது.

கந்தவேள் பெருமான் ஞானபண்டிதன் தன்னை நாடிவரும் அடியார்களின் துயரைப் போக்கி அவர்களுக்கு சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வினை வழங்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

**உதவிப் பணிப்பாளர்**
**இந்து சமய கலாசார அலுவல்கள்**
**திணைக்களம்,**
**மாவட்ட அலுவலகம்,**
**மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

## குமார புஷ்கரணி

*குமார புஷ்கரணியே குவலயம் புகழ் தீர்த்தமாக*
*அமரர்கருளிய அற்புத ஞான சக்தியே மூர்த்தியாக*
*குமரனுறையும் நெல்லியுடன் கடம்பு விருட்சமாக*
*இமயோர் இறைஞ்சு நீர்வைக் கதிர்காம தலமுள்ளதே*

*அப்பன் மடியில் அன்புடன் வீற்றிருந்து*
*தப்பின்றி பிரணவ பொருள் தந்தோனே*
*இப்பாரில் உயர் நீர்வை கதிர்காமமுறையும்*
*முப்பகை நீக்கு முத்தமிழ் மன்னவன்*

***பிரம்மஸ்ரீ தி. மயூரகிரி, நீர்வேலி.***


விளம்பர அனுசரணையாளர்கள்

நீர்வையூர்ச்
செல்லக்கதிர்காமக்
கந்தன் திருவருளுக்காகப்
பிரார்த்திக்கிறோம்.



வினோ நகைப் பூங்கா
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

"குருவாய் வருவாய்
அருள்வாய் குகனே"
தீர்த்தோற்சவம் சிறக்க
வழுத்துகின்றோம்

பவானி களஞ்சியம்
இராச வீதி,
நீர்வேலி.

# முதலமைச்சர்கள் கலந்து கொண்ட கிராமிய மேம்பாட்டு மாநாடு

வருவாயைப் பெருக்கவும் வறுமையை ஒழிக்கவும் மத்திய, மாநில அரசுகள் ஒன்றிணைந்து பாடுபட வேண்டுமென்று பிரதமர் மன்மோகன் சிங் அழைப்பு விடுத்துள்ளார்.



கிராமப்புற மேம்பாடு குறித்துப் புதுடில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசிய அவர், கிராம வளர்ச்சிக்கு உள்ளூராட்சிமன்றங்களே திட்டங்களை வகுக்க அதிகாரம்வழங்கப்படவேண்டுமெனத் தெரிவித்தார்.

கிராமப்புற மேம்பாடு தொடர்பான முதலமைச்சர்களின் இரண்டு நாள் மாநாடு டில்லியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் தொடக்கவுரையாற்றிய பிரதமர் மன்மோகன் சிங், கிராமங்களின் வளர்ச்சிக்காக விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்றார்.

ஊரகப் பகுதிகளின் வருவாயைப் பெருக்கவும் வறுமையை ஒழிக்கவும் மத்திய - மாநில அரசுகள் ஒன்றிணைந்து செயற்படவும், இதற்கான நிதியை உபயோகமாகச் செலவிடவும் வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

இதற்காக, உள்ளூராட்சி மன்றங்கள் தாமாகவே திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த அதிகாரம் அளிக்கப்படவேண்டுமென்று மன்மோகன் சிங் கூறினார்.


கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதும் வறுமையை ஒழிப்பதும் நம்முன்னுள்ள மிகப் பெரிய சவால் என்றார் அவர்,

ஊரக வருவாயைப் பெருக்க சீனாவைப் போலவே கிராமப்புற மையங்களை உருவாக்கவேண்டுமென்று பிரதமர் யோசனை கூறினார்.

உள்ளூராட்சி மன்றங்களின் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியை, மாநில அரசுகள் உடனே ஒதுக்கவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

ஊரகப் பகுதிகளில் கல்வி, சுகாதாரம், சத்துணவு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், துப்புரவு, சமூகப்பாதுகாப்பு ஆகிய திட்டங்களுக்கு முன்னுரிமையளிக்க வேண்டுமென்றும் மன்மோகன் சிங் கேட்டுக் கொண்டார்.

பல்வேறு மாநில முதலமைச்சர்களும் இம் மாநாட்டில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைத்தெரிவித்தனர். (து)




# சட்டக் கல்லூரிக் கட்டண அதிகரிப்பு

(சென்னை)

சட்டக் கல்லூரிகளின் கல்வி மற்றும் பயிற்சிக் கட்டணங்களை ரத்துச் செய்யவேண்டுமென்று ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வை.கோ. தமிழக அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் சட்டக் கல்லூரிக் கல்விக் கட்டணம் 15 ஆயிரம் ரூபாவால் அதிகரித்திருப்பதாகவும், இது கடந்த ஆண்டுகளைவிட 8 மடங்கு அதிகம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பயிற்சிக்கட்டணமாக ஆண்டுக்கு 10 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருப்பது ஏழை, எளிய மக்களுக்கு இனிச் சட்டப்படிப்பு எட்டாக் கனியாகிவிடும் சூழலை ஏற்படுத்துமென்று வை.கோ. தெரிவித்துள்ளார். (து)

# 70 கோவில்களின் குடமுழுக்கு ஒத்திவைக்க அரசின் உத்தரவு

(சென்னை)

சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோவில் உட்பட தமிழகம் முழுவதும் 70க்கும் மேற்பட்ட கோவில்களில் நடைபெறவிருந்த குடமுழுக்கு திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திருவானையூர் மருதீஸ்வரர் கோவில், மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில் ஆகியவற்றுக்கு வரும் 4ஆம் திகதியும், திருச்சியை அடுத்துள்ள குணசீலம் பிரசன்ன வெங்கடாசலபதி கோவிலுக்கு 5ஆம் திகதியும் குடமுழுக்கு நடத்த அந்தந்தக் கோவில் நிர்வாகிகள் திட்டமிட்டிருந்தனர்.

இதே திகதிகளில் மேலும் சுமார் 70 கோவில்கள் குடமுழுக்குக்குத் தயாராகி வந்தன.

ஆனால் இவை அனைத்தையும் ஒத்திவைக்குமாறு தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளிடமிருந்து கோவில் நிர்வாகிகளுக்கு வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வந்துள்ளன.

ஜூலை முதல் வாரத்தில் குடமுழுக்கு விழாக்களை நடத்தினால் ஆட்சி மேலுடத்தில் இருப்பவர்களுக்கு நல்லதல்லவென்று ஜோதிடர் ஒருவர் சொன்னதையடுத்து குடமுழுக்கு விழாக்களை ஒத்திவைக்க உத்தரவிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆட்சியில் இருப்பவர்கள் தங்களுக்கு ஆகாது என்றால் கோவில் குடமுழுக்கைக்கூட ஒத்திவைக்க உத்தரவிடுவது என்ன நியாயம் என்று கோவில் நிர்வாகிகள் சிலர் கேள்வியெழுப்பியுள்ளனர்.

குடமுழுக்குகளை ஒத்திவைக்க உத்தரவிட்டிருப்பது பக்தர்களைக் கவலை கொள்ளச் செய்துள்ளது. (து)

## இந்தியச் செய்திகள்



டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவக் கல்லூரியின் 14 ஆவது பட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநர் ராம்மோகன் ராவ் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்குச் சான்றிதழ்களை வழங்கினார். சுகாதாரத்துறை அமைச்சர் தளவாய் சுந்தரம் உடனுள்ளார்


# ஊரக மேம்பாட்டு மாநாட்டில் தமிழக முதல்வர் பங்குபற்றாதது ஏன்?

(சென்னை)

புதுடில்லியில் நடைபெற்ற ஊரக மேம்பாடு பற்றிய இரண்டு நாள் முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பங்கேற்காதது தமிழக மக்களின் நலனுக்கு உகந்ததல்ல என்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஜீ.கே.வாசன் கூறியிருக்கிறார்.



சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஊரக வேலை வாய்ப்பு, பஞ்சாயத்துராஜ் சட்டம், வறுமை ஒழிப்பு போன்ற முக்கியமான மக்கள் பிரச்சினைகள் குறித்துக் கலந்தாலோசிக்கப்படும் இந்த மாநாட்டில் தமிழக் முதலமைச்சர் கலந்து கொண்டு, தமிழக நலன் குறித்து ஆலோசனை செய்யாமல், கூட்டத்தில் தமிழகத்தின் சார்பில் பங்கேற்க அமைச்சர்களை அனுப்பி வைத்திருப்பது சரியல்ல என்று குறிப்பிட்டுள்ளார். (து)



இந்தியா வந்துள்ள பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செயலர் ரியாஸ் கோக்கர் பிரதமர் மன்மோகன் சிங்கை புதுடில்லியில் அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

# பூட்டுப் போடும் போராட்டம் பா.ம.க.வின் ஒருமாதக் கெடு

கிராமப் புறங்களிலுள்ள அரசு மதுபானக் கடைகளை அடுத்த மாதத்துக்குள் மூடாவிட்டால் அக் கடைகளுக்குப் பூட்டுப்போடும் போராட்டம் நடத்தப் போவதாகப் பா.ம.க. அறிவித்துள்ளது.

சென்னையில் அக் கட்சியின் மகளிரணி சார்பில் நடைபெற்ற அரசு மதுக்கடை ஒழிப்பு மாநாட்டில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனைச் செய்தியாளர்களிடம் விளக்கிய அக்கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், அரசு மதுபானக் கடைகளால் கிராமப் புறப் பொருளாதாரம் சீரழிந்து வருவதாகக் கூறினார்.

3500 டெஸ்மா கடைகளைக் கிராமத்தில் அரசு திறந்திருக்கின்றது என்றும் இக் கடைகளை ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் மூடாவிட்டால் ஆகஸ்ட் 15 ஆம் திகதி மதுக்கடைகளுக்குப் பூட்டுப் போடும் போராட்டத்தை மகளிரணியினர் ஆரம்பிப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆகஸ்ட் 15 ஆம் திகதி போராட்டத்தில் தாமும் பங்கேற்கப்போவதாக அவர் தெரிவித்தார்.

லாட்டரிச் சீட்டு விற்பனையை தமிழக அரசு மீண்டும் கொடுவந்தால், அதை எதிர்த்து பா.ம.க. போராடும் என்றும் அவர் கூறினார். (து)

# மருத்துவ மேற்படிப்புக்கான மாணவர் சேர்க்கை முறைகேடு நடந்ததாக உயர் நீதிமன்றில் மனு

(சென்னை)

தமிழ்நாட்டில் மருத்துவ மேற்படிப்புக்கான மாணவர் சேர்க்கையில் முறைகேடு நடந்துள்ளதாகக் கூறிச் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மருத்துவ மேற்படிப்பு மாணவர் சேர்க்கையை ரத்துச்செய்ய வேண்டுமென்று அம்மனுவில் கோரப்பட்டுள்ளது.

மனுவை விசாரித்த உயர்நீதி மன்றம் குறிப்பிட்ட டாக்டர்களை மருத்துவ மேற்படிப்பில் சேர்க்க இடைக்காலத் தடை விதித்துள்ளது.

எம்.டி.,எம்.எஸ்.போன்ற மருத்துவ மேற்படிப்புக்கான கவுன்சிலிங் கடந்த மாதம் 21 ஆம் திகதி தொடங்கிய போதே சர்ச்சைகள் எழுந்தன.

மருத்துவ மேற்படிப்புக்கான நுழைவுத் தேர்வில் முறைகேடுகள் நடந்துள்ளதாக டாக்டர்கள் தெரிவித்துவரும் புகார் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே, கவுன்சிலிங்குக்குப் பின் நடந்த மாணவர் சேர்க்கையில் மோசடிகள் நடந்துள்ளதாக டாக்டர் சதீஸ்குமார் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

கவுன்சிலிங்கின் போது ஒதுக்கப்பட்ட பாடப்பிரிவை மாணவர் சேர்க்கையின் போது வழங்காமல் வேறு பாடநெறிகளை தேர்வுக் குழுச் செயலாளர் ஒதுக்கியுள்ளதாகவும் அம் மனுவில் அவர் தெரிவித்துள்ளார்.

இது போன்று குறிப்பிட்ட 4பெண் டாக்டர்களுக்குப் பாடநெறி ஒதுக்கியதற்கான ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரரின் வழக்கறிஞர் கூறினார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி பாலசுப்பிரமணியம் மனுதாரர் குறிப்பிட்டுள்ள 4 பெண் டாக்டர்களும் மருத்துவ மேற்படிப்பில் சேர அனுமதி வழங்கப்பட்டதற்கு இடைக்காலத் தடை விதித்தார்.

அவர்களது மாணவர் சேர்க்கையை மருத்துவப் பல்கலைக் கழகம் அங்கீகரிக்கக் கூடாது என்றும் நீதிபதி தெரிவித்தார். (து)

## இன்று ஒரு தகவல்

# நீதி விசாரணை

மனுநீதிச் சோழன் வரலாறு நமக்குத் தெரியும். அதுபோல் நீதி தவறாத ஆட்சியாளர்கள் பலபேர் இருந்திருக்கிறார்கள் இந்த உலகத்தில்.ஹஸரத் உமர் பின் கத்தாப் (ரலி) என்று ஒருவர். இஸ்லாத்தின் இரண்டாவது கலிபா இவர். இவரது ஆட்சிக் காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி.

அந்த மன்னருக்கு ஒரு மகன். அவரது பெயர் அபூஷஹ்மா. அந்த மிசர் நாட்டு கவர்னர் அமர்பின் ஆஸ (ரலி) அந்த மன்னரது மகன் கவர்னர் அவர்களுடைய கவனிப்பில் இருந்தார். அந்த சமயத்தில் ஒருநாள் அவர் மதுபானம் அருந்தினார். கவர்னருக்கு இது தெரிந்து விட்டது.என்ன செய்வது? அவருக்கு மிகவும் சங்கடமாகிவிட்டது. தவறு செய்தது மன்னனின் மகன். கவர்னர் யோசனை செய்தார். அவரை மெதுவாகத் தனது வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்தார். அதிகமாக அவரைக் கஷ்டப்படுத்தாமல் ஒரு சிறிய தண்டனையைக் கொடுத்துப் பிரச்சினையைத் தீர்த்து விட்டார். ஏதோ பேருக்கு ஒரு தண்டனை அவ்வளவு தான்.

இது நடந்து கொஞ்ச நாட்கள் கழித்து மன்னருக்கு இந்த விடயம் தெரிய வந்தது. தனது மகன் என்பதனால் கவர்னர் லேசான தண்டனையுடன் விட்டு விட்டார் என்பதைப் புரிந்து கொண்டார். உடனே கவர்னருக்குத் தகவல் அனுப்பினார்."அமர்வின் ஆஸ் அவர்களே! எனது மகன் மதுபானம் அருந்தியிருக்கிறான்.அது உங்களுக்குத் தெரிந்தவுடன் தண்டனை கொடுத்திருக்கிறீர்கள்.

கலீபாவின் மகன் என்ற காரணத்தினால் குறைவான தண்டனையைக் கொடுத்ததாகக் கேள்விப்படுகிறேன். இது ஷரீஅத்தின் படி மாபெரும் குற்றம். உங்களுடைய நடத்தையும் மன்னிக்கக் கூடியதல்ல. இந்தக் கடிதம் கண்டவுடனே மகன் ஆபூஷஹ்மாவை மதீனாவுக்கு அனுப்பி வைக்க வேண்டியது என்று கடிதம் எழுதினார்.

அதைப் பார்த்த கவர்னரும் உடனே கலீபாவின் மகனை மதீனாவுக்கு அனுப்பி வைத்தார். மன்னர் முன் நீதி விசாரணை நடந்தது. அதன்படி தனது மகனுக்கு சவுக்கடி வழங்கும் படி உத்தரவிட்டார். ஹஜரத் உமர்கத்தாப்.

தண்டனை நிறைவேற்றப்பட்டது. கூடியிருந்த எல்லோரும் "ஐயா கொஞ்சம் கருணை காட்டுங்கள்" என்று மன்னரிடம் வேண்டிக் கொண்டார்கள். அந்த வேணடுகோளை மன்னர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் சொன்னார் "நீதியின் முன்னால் தந்தை மகன் அனபு, நேசம், உறவுமுறைகளையெல்லாம் கவனிக்க முடியாது. குற்றம் செய்தவர் தண்டிக்கப்பட வேண்டியவர். அவர் யாராக இருந்தாலும் சரி" என்றார்.

எல்லா ஆட்சியாளர்களுமே கவனிக்க வேண்டிய ஒரு செய்தி இது. அரசாங்க அதிகாரி ஒருவர் இருந்தார். அவர் ஒருநாள் தனது அரசாங்கக் கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த சமயத்தில் அவரைப் பார்க்க ஒரு பெரிய மனிதர் வந்தார். இவர் தனது சொந்த வேலை காரணமாக வந்துள்ளதைப் புரிந்து கொண்டார். உடனே அதுவரையில் எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்து விட்டு இன்னுமொரு விளக்கை ஏற்றி வைத்துவிட்டார்.

இந்தச் செயலுக்கு என்ன காரணம் என்று கேட்டார். இதற்கு அவர் சொன்னார் "ஐயா நீங்கள் வந்த போது இங்கே எரிந்து கொண்டிருந்தது அரசாங்க விளக்கு. இப்போது எரிவது சொந்த விளக்கு. சொந்த விஷயங்களைப் பேசும் போது அரசாங்கப் பணத் தைச் செலவு செய்யக் கூடாதல்லவா? அதனால் தான் விளக்கை மாற்றினேன்" என்றார்.

இப்படியெல்லாம் பலபேர் இந்த உலகத்தில் இருந்திருககிறார்கள். ஆனால் இப்போதெல்லாம் பல பேர் அப்படி இருப்பதில்லை.

இப்போதும் ஒருத்தர் அப்படித்தான். அரசாங்க விடயங்களைப் பரர்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். அந்த சமயத்தில் ஒருபெரிய தொழிலதிபர் அவரைப் பார்க்க வந்தார். இவர் சடாரென்று எழுந்து எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்து விட்டார். எங்கும் ஒரே இருட்டு.

"ஏன் விளக்கை அணைத்து விட்டீர்கள்?" என்று கேட்டார் வந்தவர். "இங்கே நடப்பது மற்றவரின் கண்ணில் படக் கூடாதே என்பதற்காகத் தான் விளக்கை அணைத்தேன். நீங்கள் கொண்டு வந்திருக்கும் பொருட்களை ஓரமாக வைத்து விட்டுப் போய் விடுங்கள். அதன் பின்பு விளக்கைப் போடுகிறேன்" என்றார் இவர்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## கடல் பயண விவகாரம்

# அரசு விதித்த நிபந்தனைகளை ஏற்கப் புலிகள் மறுத்துவிட்டனர்

## க. கா. குழுவின் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடல் பயணத்திற்கு அரசாங்கம் சில நிபந்தனைகளை விதித்துள்ளமையினாலேயே அவர்களது கடல் பயணம் திட்டமிட்டபடி நடைபெறவில்லை என்றும் இதனால் அரசின் நிபந்தனைகள் குறித்து விரைவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகா ரொட்டி தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடல் பயணத்திற்கு அரசாங்கம் அனுமதி வழங்கிய போதும் ஏன் இதுவரை அவர்கள் கடல் பயணத்தை மேற்கொள்ளவில்லை? என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து இதுபற்றிக் கருத்துக் கூறுகையில், விடுதலைப் புலிகளின் கடல் பயணம் குறித்து அரசாங்கம் நிபந்தனைகள் அடங்கிய கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

ஆனாலும் அரசாங்கத்தின் இந்தக் கடிதம் குறித்து சில விபரங்களை மேலும் பெற்றுக் கொள்ள விரும்புகிறோம்.

ஏனெனில்,கடிதத்தில் அரசு குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் பற்றி மேலதிக விளக்கங்கள் எமக்குத் தேவைப்படுகின்றது.

அதுமட்டுமன்றி அரசின் நிபந்தனைகளை தமிழீழ விடுதலைப்புலிகள் ஏற்க மறுத்து விட்டனர் என்று தெரிவித்துள்ளார்.

(உ-10)

# கருணா சென்ற இடம் குறித்து அலசுகிறது ஆங்கில நாளேடு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா தங்கியுள்ள இடம் குறித்துப் பல்வேறு தரப்பினராலும் பல்வேறுபட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கும் இந்நிலையில், கொழும்பின் பிரபல ஆங்கில நாளேடும் தற்போது இது விடயம் குறித்து அலசியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா கடந்த ஜூன் மாதம் 13ஆம் திகதி இலங்கையிலிருந்து வெளியேறி இந்தியா சென்றிருக்கலாம அல்லது இலங்கையில யாராவது கருணாவைக் கைதியாக வைத்திருக்கலாம் என கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கில நாளேடான டெய்லி மிரரில் சம்பிக்க லியனராச்சியின் ஆய்வொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கருணா குறித்து அண்மைக்காலமாக பல்வேறு செய்திகள் வெளியாகி வருகின்ற நிலையிலேயே, தற்போது இந்த ஆய்வு வெளியாகியுள்ளது.

கருணா இந்தியாவுக்கு கடந்த ஜூன் மாதம் 13ஆம் திகதி சென்றிராத பட்சத்தில், மலேசியா செல்வதில் இருந்து தடுக்கப்பட்டிருக்கலாம் எனவும் அவர் கொழும்பிலிருந்து 20 கிலோ மீற்றர் வடக்கே தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருணா மலேசியாவில் கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு முதலீடுகளைச் செய்திருந்ததாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (18)

## இராசி பலன்

**02.07.2004**

**(ஆனி 18, வெள்ளிக்கிழமை)**

**பூரணை பி.ப.5.23 மணி வரை**

**மூலம் மு.ப. 11.31 மணி வரை**

**இராகுகாலம் 10.27-11.57 மணி வரை**

**சுப்நேரம் 5.57-7.27 மணி வரை**

***பூரணை விரதம், அமிர்தசித்தம்***

**மேடம்**
சரீரப் பிரயாசை, தேசாந்தீர வாசம், உடல் நலக்குறைவு, பணவிரயம்.

**இடபம்**
மனக்கவலை, முழங்கால் வலி, எடுத்த கருமங்கள் தாமதமாகும், வாகனபயம

**மிதுனம்**
மனோ தைரியம், பெருமைஅடைதல், போசன நன்மை, தெய்வதரிசனம்.

**கடகம்**
தேக நலன், குடும்ப மகிழ்ச்சி புதிய செய்தி, காரிய சித்தி.

**சிங்கம்**
பணத் தட்டுப்பாடு, அஜீரண ரோகம், தாழ்ந்த சுபாவம், காரிய தாமதம்.

**கன்னி**
தன்னம்பிக்கைக் குறைவு, தனவிரயம், கல்வியில் ஆர்வம், ரோக நிலை.

**துலாம்**
கூட்டு முயற்சி, மாதர் நட்பு, தெய்வ சிந்தை, பிரயாண நன்மை.

**விருச்சிகம்**
கௌரவக் குறைவு, மனோ சங்கடம், அதிக செலவு, காரிய தாமதம்.

**தனுசு**
பிறருக்கு உதவுதல், தெய்வதரிசனம், நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம்.

**மகரம்**
சோம்பல் நிலை, மனக்குழப்பம், தன விரயம், பிரயாணம்.

**கும்பம்**
குடும்ப மகிழ்ச்சி, போசன சுகம், கீர்த்தி, உறவினர் வருகை.

**மீனம்**
தெய்வசிந்தை, உற்சாகம், காரிய அனுகூலம், விருந்துபசாரம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

**வளவன்**

# திருமறைக் கலாமன்றத்தின் மாபெரும் இசைநாடகவிழா

## இன்று முதல் 3தினங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக்கலாமன்றம் நடாத்தும் இசைநாடக விழா இன்று முதல் எதிர்வரும் 4ஆம் திகதி வரையான 3தினங்கள் இடம்பெறவுள்ளது.

தினமும் பகல் நிகழ்வுகள் காலை 9.30மணிமுதல் 1மணிவரையும் பி.ப 2.30 மணிமுதல் 5மணி வரையும் மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. இதில் இசை நாடகம் தொடர்பாக பல்வேறு தலைப்புக்களில் துறைசார் புலமையாளர்கள் கருத்துரைகளை ஆற்றவுள்ளனர்.

மாலை நிக்ழ்வாக இசை நாடக் அறிக்கைகள் 7 மணி முதல் திருமறைக்கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளன.

இதில் யாழ். குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் உள்ள சிறந்த இசை நாடகங்கள் அந்தந்தப் பிரதேசக் கலைஞர்களால் மேடையேற்றப்படவுள்ளன. (உ)

# மாத்தளை வைத்தியசாலையின் முக்கிய பிரிவுகள் மூடப்பட்டன

(மாத்தளை)

மாத்தளை ஆதார வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு, குறைப்பிரசவ சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை மூடிவிடத் தீர்மானித்துள்ளதாக சம்பந்தப்பட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

போதியளவு நிதியில்லாமை, மருத்துவகை மற்றும் வைத்திய உபகரணங்கள் இல்லாமை ஆகிய காரங்களினாலேயே மாத்தளை ஆதார வைத்தியசாலையின் முக்கிய பிரிவுகள் மூடப்படப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுந்திர முன்னணி ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வசதிகளற்ற நிலையில் மூடப்பட்ட முதலாவது வைத்தியசாலை இது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-60,10)

# சந்தேக நபரின் வீடு தீக்கிரை

(அம்பாறை)

அம்பாறை தாண்டியடியில் அண்மையில் நடைபெற்ற குணடுத் தாக்குதலில் தொடர்புடைய சந்தேக நபருடைய வீடு நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளது.

இதனால் வீடும் வீட்டினுள் இருந்த பெறுமதி மிக்க பொருட்களும் முறறாக எரிந்து நாசமாகியுள்ளது. வீட்டின் உரிமையாளர் தற்போது அக்கரைப்பற்று பொலிஸாரால் தடுத்து வைககப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (18)

# கல்விப் பொதுத் தராதர (சாதாரண) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

கணிதம் I ஆக்கம் :
மணி - 1
குணநாயகம் மனோரஞ்சன் ஆசிரியர்,
யா/ அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம், நீர்வேலி.

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. ஒரு பொருளை ரூபாய் 100 இற்கு விற்பதால் ரூபாய் 10 நட்டம் ஏற்பட்டால் அப்பொருளின் கொள்விலை யாது?

2. சுருக்குக 1 − 0.01

3. $\frac{5}{20}$ ஐ சதவீதமாகத்தருக


4. காரணிகளைக் காண்க.

$$xy^2 - x^2y$$

5. $A = \{1,3,5,7,9\}$ என்ற தொடையில் தொடை A இன் முதலிமை யாது?

6. 0.006754 என்பதை இரண்டு பொருளுடைய இலக்கங்களிற்கு மட்டந் தட்டுக.

7.




உருவில் x ஐக் கணிக்க.

8. என்னிடம் P மாபிள்கள் உண்டு. அவற்றில் 5மாபிள்களை எனது தம்பிக்குக் கொடுத்தபின் என்னிடம் மீதியாக உள்ள மாபிள்களின் எண்ணிக்கையை ஒரு அட்சர கணிதக் கோவையாகத் தருக.

9. ரூபா 10 வீதம் விற்கப்படும் ரூபா 15 பங்குகளில் 60ஐ வாங்க எவ்வளவு பணம் முதலீடு செய்யவேண்டும்.

10. சுருக்குக

$$\frac{x}{3} - \frac{x}{6}$$

11. சுருக்குக

$\frac{2}{3} + \frac{1}{4}$ இன் $\frac{4}{5}$

12. 8,3,5,11,4,9,4,7,4 என்ற எண்களின் ஆகாரம், இடையம் என்பவற்றைக் காண்க.

13. பொ.ம.சி. காண்க
2ab, 3bc, 6ac

14. சுருக்குக் $\sqrt{50}$ x $\frac{1}{\sqrt{2}}$


15. $x = -2, y = 3$ எனின்

$3x^2 - 2y$ இன் பெறுமானம் யாது?

16 ஒவ்வொன்றும் ரூபா 7.50 வீதம் 24அப்பியாசக் கொப்பிகளை வாங்கத் தேவையான அதேயளவு பணம் 18 குமிழ் முனைப்பேனாக்களின் விலைக்குச் சமம் என்னில்,ஒரு குமிழ் முனைப் பேனாவின் விலை என்ன?

17. சுருக்குக : $\frac{6}{x-y} + \frac{3}{y-x}$

18.





தரப்பட்ட உருவில் ABCD ஒரு வட்ட நாற்பக்கலாகும்.
Oவட்டத்தின் மையமாகும்.

(i) x இற்கும் y இற்கும் இடையேயுள்ள தொடர்பையும்
(ii)y இற்கும் z இற்கும் இடையேயுள்ள தொடர்பையும்எழுதுக

19.தீர்க்க
$(3x+7) - (x-1) = 2$

20. சுருக்குக $\log_2 8 + \log_5 25$


21.



உருவில் காணப்படும் சதுரத்தின் மையத்தினூடாக இரு அரைவட்டங்கள் வரையப்பட்டுள்ளன. அதில் நிழற்றிய பகுதியன் பரப்பளவு யாது?


22. a, b, c,14, x, 22 ஆகிய உறுப்புக்கள் ஒரு கூட்டல் விருத்தியில் அமையும் எனின் a இன் பெறுமானத்தைக் காண்க.

23.





உருவில் காட்டப்பட்ட நேர்கோடுAB ஆனது y=2x இற்குச் சமாந்தரமாக வரையப்பட்டு (0,-1) என்னும் புள்ளிக் கூடாகச் செல்கின்றது. நேர்கோடுAB இன்
(i) படித்திறன் யாது?
(ii) வெட்டுத்துண்டு யாது?
(iii) அதன் சமன்பாட்டை எழுதுக

24.




உருவில் காட்டப்பட்டுள்ள முக்கோணி ABC இல் $A\hat{B}C = 56^0$, $A\hat{C}B = 30^0$ஆகும்.
$B\hat{A}C$ இன் இருகூறாக்கி Ax ஆனது BC ஐ x இல் வெட்டுகின்றது. Ax, Bx, Cx என்னும் பக்கங்களை அவற்றின் நீளங்களுக்கு அமைய ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்துக.

25.





உருவில் முக்கோணிகள்AOB,CODஎன்பன இயல்பொத்தவை.
AB = 8 Cm, BO = 6 Cm, OD = 15 Cm, CD = 10 Cm ஆகும்.
(i) AO (ii)CO ஆகியவற்றின் நீளங்களைக் காண்க

26.A,B,C என்பவர்களுக்கிடையில் ஒரு குறித்த தொகைப் பணம் 1:2:3 எனும் விகிதத்திற் பங்கிடப்பட்டது.
(i) பணத்தொகையின் எப்பின்னம் C இற்குக் கிடைக்கின்றது.
(ii) A யிலும் பார்க்க ரூபா 80 கூடுதலாக C இற்குக்கிடைக்குமாயின் C இற்குக் கிடைக்கும்பணத் தொகை எவ்வளவு?
(iii) பங்கிடப்பட்ட மொத்தத் தொகைப்பணம் எவ்வளவு?

27.
ரவி 2004ம் ஆண்டு ஆரம்பத்தில் ஒரு காணியை ரூபா 800, 000 இற்கு வாங்கினார். அக்காணியின் பெறுமதி ஓர் ஆண்டில் 10% இனால் அதிகரிக்குமெனின் 2005ம் ஆண்டு ஆரம்பத்தில் அதன் பெறுமானத்தைக் காண்க


28. தீர்க்க: $x^2 + x - 2 = 0$

29.




உருவில் முக்கோணி PQR இல் உள் வரைந்த வட்டம், முக்கோணியின் பக்கங்களை K, L, M என்னும் புள்ளிகளிலே தொடுகின்றது.
PL = 3Cm, LR = 5Cm, QK = 7Cm எனின் முக்கோணி PQR இன் சுற்றளவைக்காண்க

30.




முக்கோணி ABC இன் பரப்பளவும் பக்கம் BC இன் நீளமும் மாறா திருக்குமாறு உச்சி A இயங்கும் எனின் A இன் ஒழுக்கு யாது?

**திங்கட்கிழமை கணிதம் பகுதி -I இற்கான விடையுடன், பகுதி - II இற்கான வினாக்களும் வெளிவரும்.**

## யூரோக்கிண்ணம் – 2004

# ஹொலண்டை வெற்றி கொண்டு இறுதிப் போட்டியில் போர்த்துக்கல்

நேற்று நடைபெற்ற யூரோக்கிண்ணத்திற்கான முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஹொலண்ட் அணியை வீழ்த்திப் போர்த்துக்கல் அணி இறுதியாட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.






2:1எனும் கோல் கணக்கில் இப் போட்டியில் வெற்றிபெற்ற போர்த்துக்கல் அணியின் கையே பெரும்பாலும் மேலொங்கியிருந்தபோதும் ஹொலண்ட் அணியின் நட்சத்திர வீரர் ரூட்நிஸ்ரல் றூய் இடைவேளைக்குச் சற்று முன்னர் போட்ட ஒரு கோல், ஓ.்.ப் முறையில் போடப்பட்டதாக நடுவர் அறிவித்தமையால் போட்டியின் போக்கே மாறியது.

போர்த்துக்கலின் இந்த வெற்றியைத் தொடர்ந்து, இப்போட்டிகளை நடாத்தும் அந்நாட்டின் வெற்றிவாய்ப்பு அதிகரித்திருப்பதாக உதைபந்து அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். போர்த்துக்கல்லின் தலைநகரும் ஏனைய நகரங்களும் விழாக்கோலம் பூண்டுள்ளன. உதைபந்து விளையாட்டில் ஊறிப்போன இந்நாட்டவர்களில் 98 சதவீதமானவர்கள் ரோமன் கத்தோலிக்கராவர் இந்நாட்டிலிருந்தே உலகின் பெரும்பாலான நாடுகளில் அம்மதம் பரவியது. போர்த்துக்கலுக்கு வெற்றிவேண்டி கத்தோலிக்க தேவாலயங்களில் விஷேட வழிபாடுகளும் நடைபெறுகின்றன. (யே)

## விம்பிள்டன் ரெனிஸ் – 2004

# ஹென்மன் அதிர்ச்சித் தோல்வி ரொஜ பெடரர் அரையிறுதியில்

2004ஆம் ஆண்டு விம்பிள்டன் போட்டிகளின் அதிர்ச்சிகரமான தோல்வி ரிம் ஹென்மனுக்குக் கிடைத்துள்ளது.டெனிஸ் தரப்படுத்தலில் இடம்பெறாத குரோஷிய வீரர் மரியோன் அன்சிக்





ஹென்மனின் கனவைச் சிதறடித்தார்.

20வயது நிரம்பிய அன்சிக் 7:6,6:4,6:2எனும் செற்களில் ஹெமனுக்கு அதிர்ச்சித் தோல்வியை வழங்கினார். விம்பிள்டன் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகக்கூடியவர் என்று கருதப்பட்ட பிரித்தானிய வீரர் றிம்ஹென்மனுக்குத் தனது தோல்வியை நம்ப முடியவில்லை.

மறுபுறத்தில் நடப்புச் சம்பியனான ரொஜ பெடரர் லெயிற்றன் ஹெவிற்றுடனான காலிறுதியாட்டத்தில் 6:1,6:7(1:7)6:0,6:4 எனும் செற்களில் வென்றார். 2002 சம்பியனான ஹெவிற் இரண்டாவது செற்றில் அற்புதமாக ஆடியபோதும் பெடரருக்கு ஈடுகொடுக்க அவரால் முடியவில்லை.

அரையிறுதியாட்டத்தில் செபஸ்ரியன் குரொஸ்ஜீனை எதிர்கொள்ளவிருக்கும் பெரடர் இம்முறையும் இறுதியாட்டத்திற்கு வருவார் என்று பொதுவாக எதிர்வு கூறப்படுவதோடு பட்டத்தை வெல்லக்கூடிய சந்தர்ப்பங்களும் அவருக்கே இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (யே)

## கே.சி.சி.சி. கிண்ண

# அரையிறுதிப் போட்டி இன்று

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்டுவரும் கிரிக்கெற் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று இடம்பெறுகின்றன.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் பற்றிசீயன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து காலை 8.30மணிக்கு மோதும். மாலை 1.30மணிக்கு இரண்டாவது அரையிறுதியில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகம் பல்கலைக்கழக அணியை எதிர்த்து விளையாடும் என்று போட்டி அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.


நீண்ட நாட்களாக நடைபெற்றுவரும் இச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் மிக விறு விறுப்பாக இடம்பெறும் என்று பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

இவ் ஆட்டத்தைக் கண்டுகளிப்பதற்கு பெருந்தொகையான கிரிகெற் ரசிகர்கள் கூடுவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (யே)

## முதலாவது டெஸ்டில்

# அவுஸ்திரேலிய அணி 75–2

இலங்கைக்கும் அவுஸ்தி ரேலியஅணிக்கும்இடையில் நேற்று ஓவல் மைதானத்தில் ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்ட மதியபோசன இடைவேளையின் போது ஆஸி. அணி 75ஓட்டங்களுக்கு 2விக்கட்டுக்களை இழந்திருந்தது.




நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் மாவன் ஆஸி. அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தமை தவறானது என்று எண்ணும் வகையில் 70 ஓட்டம் வரை அவ்வணி விக் கட் இழப்பின்றி ஆடியது.

ஆயினும் மதிய போசனத்திற்கு சிறிது நேரமிருந்த போது11 பந்துகள் இடைவெளியில் ஒரு ஓட்டத்திற்கு ஜஸ்ரின் லாங்கரும் மத்தியூ எலியட்டும் ஆட்டமிழந்து சென்றனர். ஐந்துவருட இடைவெளிக்குப்பின் களமிறங்கிய எலியட் ஏழு நிமிடங்களே களத்திலிருந்து ஒரு ஓட்டத்தைப் பெற்றார். (யே)

## போர்மியூலா ஒன்றில்

# மக்–லரன் புதிய கார்

போர்மியூலா ஒன்று கிராண்ட் பிறிக்ஸ் பந்தயங்களில் **MP4**-19 ரக மக்லரன் கார்கள் மிகுந்த பின்னடைவை எதிர்நோக்கி வந்தமையால் அக் கம்பனி புதிய கார் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.



**MP4**-19**B** என்று பெயர் வழங்கப்பட்டுள்ள இந்தக் கார் இவ் வார இறுதியில் இடம்பெறவிருக்கும் பிரெஞ்சுக் கிராண்ட் பிற்க்ஸ் போட்டிகளில பங்கேற்கவிருக்கின்றது. மக்லரன் அணியின நட்சத்திர சாரதிகளான டேவிட் கோல்தாட்டும் கிம்றிக் கொனனும் இந்தக் காரில் பரீட்சார்த்த பயணம் செய்து திருப்தி தெரிவித்துள்ளனர்.

மேர்சிடிஸ் என்ஜின் பொருத்தப்பட்டுள்ள இக்காரின் செசியில் புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. ஒயில் சிஸ்ரத்திலும மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (யே)

# விளையாட்டுச் செய்திகள்

ATHENS 2004
XXVIII OLYMPICS 13-29 AUGUST

ஒலிம்பிக்கிற்கு இன்னும் 42 தினங்கள்

## ஒலிம்பிக் வரலாறு 17

# 1972ல் மூனிச் நகரில் இடம்பெற்ற 17வது ஒலிம்பிக்

1972ல் மூனிச் நகரில் போட்டிகள் ஆரம்பமான அன்றே இஸ்ரேலிய ஒலிம்பிக் குழுவினர் மீது இஸ்ஸாமிய பயங்கரவாதிகள் தாக்குதல் நடாத்தினர். பதினொரு வீரர்களும் ஐந்து பயங்கரவாதிகளும் இதில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இஸ்ரேல் உடனடியாக நாடு திரும்பியது அதனை தொடர்ந்து நெதர்லாந்து,நோர்வே பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் அணிகளில் இருந்து பலர் வீடு திரும்பினர்.



அடுத்த நாள் போட்டிகள் நிறுத்தப்பட்டு இறந்தவர்களுக்கு அஞ்சலி நிகழ்ச்சி இடம் பெற்றது. அன்று மாலையே இஸ்ரேலின் அனுமதியுடன் போட்டிகள் மீண்டும் ஆரம்பமாகின.

ரொடீசியா என்று அழைக்கப்பட்ட சிம்பாப்வே அதன் இனவெறி ஆட்சி காரணமாக தடைசெய்யப்பட்டு போட்டிக்கு வந்திருந்த அந்நாட்டு வீரர்கள் திரும்பி அனுப்பப்பட்டனர்.

195 போட்டிகள் இடம்பெற்றன. அம்பும் வில்லும் உள்ளக கைப்பந்துப்போட்டியும் அறிமுகமாயின. 4தங்கம்,3அஞ்சல் போட்டித்தங்கங்களுடன் நீச்சலில் மார்க் ஸ்பிற்ஸ்நட்சத்திரமாக ஜொலித்தார்.

சோவியத் ஜிம்நாஸ்டிக் தாரகை ஒரு இரவிலே மூன்று தங்கங்களும் ஒரு வெள்ளியும் வென்று எல்லோரது அன்பையும் வென்றார். (யே)

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின் - குறள்

வலம்புரி

# தமிழ் மக்களின் மனங்களை ஜனாதிபதி வெல்வாரா?

பௌத்த சிங்களவர்களின் நடவடிக்கை காரணமாகவே விடுதலைப் புலிகள் ஆயுதமேந்திப் போராடினார்களென நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரங்கா தெரிவித்துள்ளார்.

சிங்களவர்களின் பேரினவாதப் போக்கினால் தமிழ் மக்களின் உரிமையை நிலைநிறுத்துவதற்காக விடுதலைப் புலிகள் ஆயுதமேந்திப் போராட வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டதென்பது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கருத்தெனலாம்.

ஜனாதிபதி கூறிய மேற்போந்த விடயம் அனைவராலும் சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும்.

சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களை நசுக்கி அவர்களின் உரிமைகளைப் பறித்ததன் காரணமாகவே அழகிய இலங்கைத் தீவு யுத்தத்தால் அழிவுற்றுப் போனது. இந்த உண்மையை சிங்களவர்கள் முழுமையாக உணர்ந்து கொள்ளவில்லை என்றே கூற வேண்டும்.

விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்திப் போராடுவதற்குக் காரணம் பௌத்த சிங்களவர்கள் எனக் கூறிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பௌத்தத்தைக் காப்பாற்ற வேண்டிய பௌத்த பிக்குகள் தமது பணியை விடுத்து அரசியலுக்குள் நுழைந்து இப்போது பாராளுமன்றத்திற்கும் வந்துள்ளனர். இவர்களால் நாட்டிற்கும், பௌத்தத்திற்கும் கேடு ஏற்பட்டுள்ளதெனவும் கூறியுள்ளார்.

ஜனாதிபதி கூறிய விடயம் முற்றுமுழுதான உண்மை என்பதில் எந்த மறுப்பிற்கும் இடமில்லை. ஆனால், பௌத்த மதகுருமாரின் ஆசியுடனும், ஆலோசனையுடனும் ஆட்சி நடத்திய சிங்களப் பேரினவாதிகளே பௌத்த பிக்குகள் அரசியலிற்குள் நுழைவதற்கு வகை செய்தவர்கள் என்பதையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியிருப்பாராயின் அவரின் கருத்து முழுமை பெற்றிருக்கும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைப் பொறுத்தவரை அவரின் அரசியல் பிரவேசத்தின் ஆரம்ப காலத்தில் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய ஒருவராக அவர் விளங்கினார். இலங்கையில் இனப் பிரச்சினையுண்டு. அதற்குத் தீர்வு வெளிநாடொன்றின் அனுசரணை மூலமே காணப்பட முடியுமெனக் கூறியவர். விடுதலைப் புலிகளுடன் நோர்வேயின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சை ஆரம்பித்தவரும் அவரே. எனினும், அவரின் ஆரம்பகால சமாதான முன்னெடுப்புக்களுக்கும் பின்னர் அவர் நடந்து கொண்ட முறைகளுக்கும் இடையே எதிர்மாறான தொடர்பே காணப்பட்டது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமெனக் கூறிய ஜனாதிபதி தான் கூறியதை மறந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணக் குடாநாட்டை மீளக் கைப்பற்ற வேண்டுமென முடிபெடுத்தார்.

நோர்வேயின் அனுசரணையுடன், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண முற்பட்ட ஜனாதிபதி, பாதியில் தனது பயணத்தை மாற்றிக் கொண்டமை அவர் செய்த மிகப் பெரும் தவறாகும்.

தனது ஆட்சியில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தையின் ஆலோசனைக்கு இடம் கொடுத்த ஜனாதிபதி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக மிகப் பெரியதொரு போரைத் தொடுத்தார்.

அவரின் ஆட்சிக் காலத்திலேயே யாழ். குடாநாடு பாரிய அழிவைச் சந்தித்தது. குறிப்பாகத் தென்மராட்சிப் பகுதியில் நடத்திய பல்குழல் தாக்குதல் அப்பிரதேசத்தில் உள்ள அனைத்துக் கட்டடங்களையும் தரைமட்டமாக்கியது.

தமிழ் மக்கள் தாங்கொணாத் துன்பத்தை அனுபவித்தனர். இவ்வாறு அவர் நடந்து கொண்டதனால் தமிழ் மக்கள் அவர் மீது வெறுப்புக் கொண்டனர்.

அந்த வெறுப்பை அவர் நீக்க வேண்டுமானால் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல வேண்டும். அதற்கு ஒரே வழி விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதே ஆகும்.

## 6நாடுகளின் பங்கேற்புடன் இலங்கையில்

# ஐ.நா. இராணுவப் பிரிவு நடாத்திய "சமாதானப் பயணம்" முடிவுற்றது

(கொழும்பு)

"சமாதானப் பயணம்" என்ற தொனிப் பொருளில் ஐ.நா. இராணுவப் பிரிவினரால் கடந்த இரு வாரங்களாக இலங்கையில் நடத்தப்பட்ட பாரிய அளவிலான பயிற்சி நிறைவு பெற்றது.

இலங்கை, அமெரிக்கா, பங்களாதேஷ், நேபாளம், மொங்கோலியா, மலேசியா ஆகிய 6நாடுகளைச் சேர்ந்த 200 இராணுவப் பயிற்சியாளர்களும் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 70 பேரும் இதில் கலந்து கொண்டனர்.

இதன் இறுதிநாள் நிகழ்வும் சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் குக்குலே கங்கையில் இலங்கை இராணுவத்தினால் அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட சமாதானப் பயிற்சி முகாமில் இடம்பெற்றது.

ஐ.நா.வின் சமாதானப் பயிற்சித் திட்டத்தின் மூன்றாவதும் இலங்கையில் முதலாவதாக நடைபெற்றதுமான இந்தப் பயிற்சித் திட்டத்தில் மலேசியாவின் இராணுவப் பயிற்சி ஆலோசகரும் ஓயவுபெற்ற இராணுவ லெப்டினன் கேணலுமான ஜோன் டெரிக் தலைமையிலான நேபாளம், உருகுவே, கெராட்டியா, ஹங்கேரியா, கானா, அமெரிக்கா ஆகிய 7 நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களும் பயிற்சியின் கண்காணிப்பாளர்களாகக் கலந்து கொண்டனர்.

இறுதிநாள் நிகழ்வில் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மற்றும் இலங்கை இராணுவ தலைமையகத்தின் பயிற்சிப் பணிபபாளர் பிரிகேடியர் எஸ்.எம்.டி.ஏ.ராஜபக்ஷ, பிரதிப் பிரதம இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சூலா சேனவிரத்ன, இராணுவ முகாம்களின் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் பெஸில் பீரிஸ், இராணுவத்தலைமையக பயிற்சிப் பணியாளர் பிரிகேடியர் ஸ்ரீநாத், ராஜபக்ஷ, பிரதம இராணுவப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் பாரமிகுலதுங்க, இராணுவப் பொலிஸ் பிரிவுச் செயலாளர் மேஜர் ஜெனரல் எகெடவெல, இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா, சமாதானப்பயணம் பயிற்சித் திட்டப் பொறுப்பதிகாரி லெப்டினன் கேணல் கே.சி.குணவர்த்தன, இலங்கைக் கடற்படை பிரமத அதிகாரி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, இலங்கைப் பொலிஸ் விசேட அதிரடிப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் லெங்கா உட்பட ஐ.நா.வின் பாதுகாப்புப்பிரிவின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (உ)

## ஜாதிக ஹெல உறுமயவில்

# அதிருப்தியுற்றோர் ஒன்றிணைந்து புதிய கட்சியை ஆரம்பிக்கின்றனர்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் மாற்றுக் கட்சி என்ற பெயரில புதிய கட்சி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவன் தற்போதைய செயற்பாடுகள குறித்து அதிருபதியடைந்தவர்கள் கூடியே இக்கட்சியை ஆரம்பிக்கவுள்ளதாக அதன் ஏற்பாட்டாளரான கீர்த்தி ஸ்ரீ வக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு மேற்படி கட்சியின தோற்றத்திற்கான காரணத்தை விளக்கிய கீர்த்திஸ்ரீ விக்கிரமசிங்க,

அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படுவதன் மூலம் தர்மராட்சியம ஒன்றை நிறுவமுடியாது. அரசிற்கு ஒத்துழைப்புடன செயற்படுவதன் மூலமே அதனை உருவாக்கமுடியும்.

இதனடிப்படையிலேயே எமது கொள்கைகளும் செயற்பாடுகளும் இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-4,64,61)

# மதமாற்றத் தடைச்சட்டத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை

## ஆயர்கள் கூட்டாக அறிவிப்பு

(கொழும்பு)

மதமாற்றத்தைத் தடுப்பதற்கும் மட்டுப்படுத்துவதற்கும் ஏற்றவகையில் உருவாக்கப்படும் சட்டத்தினை தாங்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என கத்தோலிக்க ஆயாகளும் தேசிய கிறிஸ்தவ ஆலோசனை மன்றமும் தமது கூட்டு அறிக்கையில் தெரிவித்துள்ளன.

"கட்டாய மதமாற்றத்தை தடைசெய்தல்" எனத் தலைப்பிடப்பட்ட சடடமூலம் அமைச்சரவையினால் ஏற்றுக்கொள்ளபபட்டதுடன் 2004ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி வெளியிடப்படட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

நெறிமுறையற்ற மதமாற்றங்கள பற்றிய மனக்குரோதம் வளர்வதை நாஙகள ஒப்புக்கொள்ளவில்லை என இந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ஒரு சட்டத்தை உருவாககுதல் பிரச்சினைகளைத் தீககுமென நாங்கள் நம்பவில்லை என்றும் இத்திட்டம் வேறுபல சிக்கல்களை உருவாக்கும் தனிமனித சுதந்திரத்தை வெகுவாகப் பாதிப்பதுடன, சிறுபான்மை மதத்தினரை ஒடுக்குவதாகவும் இது அமைந்துள்ளது. இவ்வகையான சட்டங்கள் அமைக்கப் படடால் சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சி, மதச் சுதந்திரம் ஆகியன பாதிக்கப்படும் என்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

## உள்ளூராட்சி வாரத்தில மரநடுகை

(சாவகச்சேரி)

எதிர்வரும் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை கொண்டாடப்படவுள்ள உள்ளூராட்சி தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் 5ஆயிரம் மரக்கன்றுகளை நாட்டுவதற்கு யாழ். பிராந்திய உளளூராட்சி உதவி ஆணையாளர் இராசையா நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில்உள்ள 15உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக இவ் 5ஆயிரம் மரக்கன்றுகளும் நாட்டப்படவுள்ளன. (உ-29)

### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஆத்மா ஆட்சி புரியவல்லது. உள்ளத்தில் பிரகாசிப்பது. உடலோ ஆளப்படுவது. புறத்தில் இருப்பது. ஆக இந்த இரண்டும் ஒன்று என நினைப்பது அஞ்ஞானமேயன்றி வேறில்லை.

சுவாமி விவேகானந்தர்

## மட்டு.அரசாங்க அதிபராக வேல்முருகு சண்முகம் நியமனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரியான வேல்முருகு சண்முகம் நேற்றுமுன்தினம் தனது கடமையினை பொறுப்பேற்றுக் கொண்டார்.

துறைநீலாவணையைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வாழ்விடமாகவும் கொண்ட இவர், யாழ். பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறைசிறப்புப் பட்டதாரியாகத் தேறி, 1985ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த இவர் தேர்தல்கள் உதவி ஆணையாளராக மட்டக்களப்பு, வவுனியா மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் 12 வருட காலம் கடமையாற்றியுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இரண்டு வருடங்கள் பதிவாளராகவும் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நான்கு ஆண்டுகள் மேலதிக அரசாங்க அதிகாரியாகப் பணியாற்றியதுடன் ஒரு வருட காலம் கொள்கை அபிவிருத்தி அமுலாக்கல் அமைச்சில் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (18)

## ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

ஐக்கய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் உசைன் பைலா, தன்னைத் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முயற்சிப்பதாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கொன்றை நேற்று முன்தினம் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 2003 ஆம் ஆண்டு அக்டோபரில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து தான் இராஜினாமாச் செய்து விட்டதாகவும் இதனை ஏற்றுக்கொண்டதாக கட்சி அறிவித்திருந்ததென்றும் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள அவர் இவ்வாறான நிலையில் தன்னைத் தேசியப்பட்டியல் எம்.பி. பதவிலிருந்து நீக்கும் அதிகாரம் முஸ்லிம் காங்கிரஸுக்கு இல்லையென்றும் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார். (18)





நயினைத் தேர்த் திருவிழாவில் கலந்து கொள்ள குறிகாட்டுவானில் காத்திருக்கும் பக்தர்கள்,கற்பூரச் சட்டியேந்தும் பக்தர்கள்,அங்கப் பிரதட்சணம் செய்யும் பக்தர்கள் ஆகியோரைப் படங்களில் காணலாம்

## பிராந்திய அலுவலக திறப்பு விழா இன்று

சர்வதேச அரிமாக் கழகங்களின் மாவட்டம் 306 பி சார்ந்த வட மாகாணத்தில் உள்ள 16 அரிமாக் கழகங்களின் செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்துச் செயற்படுத்தும் வகையில் இன்று பிற்பகல் 4மணிக்கு இலக்கம 20,கன்னாதிட்டி ஒழுங்கை யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பிராந்திய அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்படவிருக்கிறது.

இந்நிகழ்வில் 306 பி இன் ஆளுநர் லயன் சனத் குணசேகரா அவரது பாரியார் லயன் ஆன் ஆகியோர் அலுவலகத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைப்பர்.(த-18)

## மன்னாரில் ஆறு இந்திய மீனவர் சிறையில் இருந்து தப்பியோட்டம்

(மன்னார்)

ஆறு இந்திய மீனவர்கள் மன்னார் சிறைச்சாலையிலிருந்து நேற்று அதிகாலை தப்பிச் சென்றுள்ளனர்.

இம் மீனவர்களில் ஒருவர் நேற்று நண்பகல் பள்ளிமுனையில் வைத்துக் கைது செய்யப்பட்டார். ஏனைய ஐந்து பேரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் மன்னார் சிறைச்சாலை அதிகாரிகளும் பொலிசாரும் ஈடுபட்டிருப்பதாக சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி தெரிவித்திருக்கின்றார். மின்சாரத் தடை ஏற்பட்ட வேளையிலேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து விசாரணைக்காக நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்ட ஏழு இந்திய மீனவர்களில் ஆறு பேரே இவ்வாறு தப்பிச் சென்றனர்.

மற்றையவர் நேற்றுக் காலை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.

அவரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் என்.எம்.எம். அப்துல்லா உத்தரவிட்டுள்ளார். (ச-121)

## நயினை அம்மனின் தேர் காண பக்தர்கள் புடை சூழ்ந்தனர்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத் தேர்த்திருவிழாவான நேற்று பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

பல்வேறு இடங்களிலுமிருந்து வந்த பக்தர்களின் பெரும்பாலானோர் அங்கப் பிரதட்சணம்,கற்பூரச் சட்டி போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

தம்ப பூசை, வசந்த மண்டப பூசை என்பனவற்றைத் தொடர்ந்து காலை 9.30 மணியளவில் அம்பாள் தேரில் ஆரோகணித்து வீதியுலா இடம் பெற்றது.

குறிகாட்டுவான் துறை முகத்தில் கால் வலிக்க நீண்ட நேரம் காத்திருந்த பக்தர்கள் படகுகள் மூலம் நயினாதீவுக்குச் சென்று தேர்த்திருவிழாவைக் கண்டுகளித்தனர். பக்தர்களுக்கு அமுதசுரபி அன்னதான சபையால் அமுதளிக்கப்பட்டது.

இன்று காலை 10 மணியளவில் தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. (ச)

## குருபூரணை விழாவும் மருத்துவ முகாமும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீராம கிருஷ்ண சேவாச்சிரம சங்கம் நடத்தும் குருபூரண விழாவும் இலவச மருத்துவ முகாம் நிகழ்வும் இன்று நடைபெறவுள்ளது.

குருபூரண நிகழ்வு மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் முற்பகல் 9மணிக்கும் இலவச மருத்துவ முகாம் நிகழ்வு காலை 8.30 முதல் 9.30மணிவரை மூளாய் மனித வள அபிவிருத்தி சனசமூக நிலையத்திலும், மு.ப.9.45 மணி முதல் 10.45 மணிவரை மூளாய் ஐக்கிய இளைஞர் சனசமூக நிலையத்திலும் இடம் பெறவுள்ளது.(18)

## எரிச்சோல்...

ருந்த எரிக்சோல் ஹெய்ம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், எதிர்க் கட்சித் தலைவர் ரணில விக்கிரமசிங்கா, அரச சமாதானச் செயலகத்தின் தலைவர் ஜயந்த தனபால, மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரைச் சந்தித்துப பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இன்று நோர்வே திரும்பும் எரிக்சோல் ஹெய்ம் இச் சந்திப்புத் தொடர்பான விரிவான அறிக்கையை நோர்வே வெளிவிவகார அமைச்சரிடம் கையளிக்கவுள்ளார்.(த-60,10)

## கருணாவுக்கு இராணுவம்...

திகதி எனது அறிவிப்பின் பிரகாரம் சமாதான நகர்வுகளை மிகுந்த அர்ப்பணிப்புடன் முன்னெடுத்துச் செல்லவுள்ளேன். எனது சமாதான நகர்வுகளின் போது யுத்தத்தால் பாதிப்படைந்துள்ள வடக்குக் கிழக்குப் பகுதிகளின் புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்குடியேற்றம் அபிவிருத்தி என்பவற்றை மேற்கொள்வதற்கு முன்னுரிமை அளிக்கவுள்ளேன்.

இந் நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான புரிந்துணர்வுடன் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பிக்வுள்ளேன். புதிய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட தலைமையின் கீழ் இராணுவம் எவ்வித சந்தேகமும் இன்றி யுத்த நிறுத்த உடன்படிக்கையை மதித்து நடக்கும்.

இனப்பிரச்சினைக்கான நிரந்தர சமாதானத்தைக் காண்பதற்கும், யுத்த நிறுத்த உடன்படிக்கையை சரிவரக் கடைப்பிடிப்பதிலும் அரசாங்கம் உறுதியாக உள்ளதென்றும் தெரிவித்த ஜனாதிபதி கருணா அணியினருக்கு அரசாங்கம் ஒரு போதும பாதுகாப்பு அளிக்கவில்லை என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை இடம் பெற்ற இச் சந்திப்பில் நோர்வேத் தரப்பில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல் ஹெய்ம் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கார் ஆகியோரும் அரச தரப்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சமாதான செயலாளர் நாயகம் ஜயந்த தனபால, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எச்.எம்.ஜி.எஸ்.மலிக்தாரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.(ம)

## சமாதான..

வதால் அவர்களுடனான நம்பிக்கையினைக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளன.

வடுதலைப் புலிகளினால் வெளியேற்றப்பட்ட கருணா, இப்போது எங்கிருக்கிறார் என எமக்குத் தெரியாது.

கருணாவின் செயற்பாடுகளுக்கு இராணுவம் உதவியளிக்கவில்லை. அவ்வாறு எமக்குத் தெரியாமல் உதவியளிக்கப்பட்டிருக்குமானால் அது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

நாம் இராணுவத்தினர் என்ற வகையில் யுத்தத்தில் ஈடுபடுவதில் மாததிரம் எமது கடமையல்ல. நாட்டில் அமைதி நிலைமையை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதும், எமது பிரதான கடமையாகும். மிகுந்த நம்பிக்கையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் எமது வீரர்கள் இதனை மேற்கொண்டனர்: இது எமக்குக் கிடைத்தவெற்றியாகும். சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதறகு இதனைச் சாதகமாகப் பயன்படுத்த எமது வீரர்கள் பலமாக இருக்க முடியும் என்றும் சாந்த கொட்டே கொட மேலும் தெரிவித்தார். (த-121)

## நான் அல்ல..

குறிப்பிடும்படியாகக் கேட்ட போது தனது பெயர் சதாம் ஹுசைன் என்றும் ஈராக் ஜனாதிபதி என்றும் குறிப்பிட்டார்.

நீங்கள் அத்துமீறல் சம்பவங்களைப் புரிந்துள்ளீர்களா என்று கேட்ட போது 'நான் அல்ல; நாய்களே அத்துமீறல்களைப் புரிந்துள்ளன' என்று காட்டமாகக் கூறினார்.

இது இவ்வாறு இருக்க அமெரிக்க இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட சதாம் ஹுசைன், ஈராக்கின் இடைக்கால அரசிடம் நேற்று முன்தினம் சட்ட பூர்வமாக அமெரிக்க இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.(ம)


உ

சிவமயம்

'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'

# சிவபூமி பாடசாலை

(சிறுவர் மனவிருத்திப் பாடசாலை)

## திறப்பு விழா அழைப்பு

**காலம்:** 02.07.2004 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு

**இடம்:** சிவபூமி பாடசாலை அரசடிப் பிள்ளையார் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

**தலைமை:**
'செஞ்சொற்செல்வர்' ஆறு திருமுருகன அவர்கள்
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை)

**பிரதம விருந்தினர்:**
சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி.J.P அவர்கள்
(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பளை)

**கௌரவ விருந்தினர்:**
திருமிகு.ம.ஜெயசீலன்
(இலண்டன்)

## வாழ்த்துரை

* பேராசிரியர் சு.மோகனதாஸ் (துணைவேந்தர்,யாழ்.பல்கலைக்கழகம்)
* உயர்திரு.இ.த.விக்னராஜா (யாழ்.மாவட்ட நீதிபதி)
* உயர்திரு.சி.இளம்பரிதி (பொறுப்பாளர், யாழ்.மாவட்ட அரசியல் துறை, தமிழீழ விடுதலைப் புலிகள்)
* பேராசிரியர் அ.சண்முகதாஸ் (தலைவர், கல்வி மேம்பாட்டுப் பேரவை,யாழ்.மாவட்டம்)
* வைத்திய கலாநிதி கா.சிவபாலன் (பீடாதிபதி,மருத்துவபீடம், யாழ்.பல்கலைக் கழகம்)
* பேராசிரியர் தயா சோமசுந்தரம் (தலைவர், உள மருத்துவத்துறை மருத்துவபீடம், யாழ்.பல்கலைக் கழகம்)
* கலாநிதி தி.கமலநாதன் (பீடாதிபதி,தேசிய கல்வியியற் கல்லூரி யாழ்ப்பாணம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**நிர்வாக சபை,**
**சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில்.** (8629)



## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான கேள்விகள் 'இக்ராட்' நிறுவனத்தில் தரம் 'எம்.9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :2004-07-14, பி.ப. 2.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி :2004-07-15, ந.ப. 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் திறந்து பார்க்கும் திகதி :2004-07-15, பி.ப. 3.00 மணி

| வேலையின் விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம்(வற் உட்பட) |
|---|---|---|
| 01.மின்சார நிலைய வீதி திருத்தம் | 9500.00 | 575.00 |
| 02.உடுவில் லவ்லேன் திருத்தம் | 9000.00 | 575.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களின் மூலப் பிரதியை 'செயலாளர்,வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்' என்ற முகவரிக்கும், அதன் பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விபரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமதி ச.சொக்கலிங்கம்,**
**செயலாளர்,**
**வலி.தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
2004.07.01 (C-290)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.